பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூ2/50

When only The best is Good Enough



Buy
Solide Pumps

சுடர்: 4 சுக்கில ஹூ சித்திரை மீ 04 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 10 (17 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-111

# பேச்சுக் குறித்துப் பேச பிரதிநிதியை நியமிக்குக!

## விடுதலைப் புலிகளின் கடிதத்துக்கு ஜனாதிபதி பிரேமா நேற்றுப் பதில்

கொழும்பு, ஏப்ரல் 17

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் நேரடிப் பேச்சுக்களை நடத்துவதற்கு தேவையான ஒழுங்குகளைச் செய்வது பற்றி கலந்தாலோசிப்பதற்காக உங்கள் பிரதிநிதி ஒருவரை நியமனம் செய்யுங்கள்!

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கோரியிருக்கிறார்.

ஜனாதிபதியின் சார்பில் ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. எச்.ஜே. விஜேதாஸ இப்பதிலை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற் பிரிவுக்கு அனுப்பி வைத்தார்.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று பேச்சுக்கள் நடத்த தாங்கள் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நேற்று முன்தினம் பதில் அனுப்பியது தெரிந்ததே.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதி திரு. அ. மாணிக்க ஜோதி சனிக்கிழமை இரவு பத்து மணியளவில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்து விடுதலைப் புலிகளின் கடிதம் ஒன்றைக் கையளித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடிதம் கிடைத்து சரியாக 12 மணி நேரம் கழித்து, ஜனாதிபதியின் சார்பில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு பதில் அனுப்பி வைக்கப்பட்டதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் திரு. விஜேதாஸ லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கத்துக்கு டெலக்ஸ் மூலம் இப்பதிலை அனுப்பிய

[8ஆம் பக்கம் பார்க்க]

## பேச்சுக்களை வரவேற்கிறார் இந்தியப் பிரதமர் ராஜீவ்!

சிம்லா, ஏப்ரல் 1

இலங்கையில் வன்முறையை முடிவுக்கு கொண்டு வரும் எல்லா விதமான பேச்சுக்களையும் நான் வரவேற்கின்றேன்.

—இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி சிம்லாவில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் சொன்னார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நேரடிப் பேச்சுக்களுக்கு வரும்படி ஜனாதிபதி பிரேமதாஸ அழைத்ததும் அந்த அழைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றிருப்பதும் தெரிந்ததே.

அதுபற்றி செய்தியாளர் கேட்ட கேள்விக்கே பிரதமர் முன்கண்டவாறு கருத்து வெளியிட்டார். (உ-எ)

## பஸ்களை பழுது பார்க்கும் வேலை இனி சாரதிகளிடம்

கொழும்பு, ஏப். 17

அரசு பஸ்களில் ஏற்படும் சிறு திருத்தங்களை இனிமேல் அவற்றின் சாரதிகளே மேற்கொள்ள வேண்டும் என்று போக்குவரத்து துணை அமைச்சர் எம். எஸ், செல்லச்சாமி உத்தரவிட்டுள்ளார்.

இப்போது பஸ்கள் இடைவழியில் பழுதடைந்துவிட்டால் சம்பந்தப்பட்ட பஸ் டிப்போவில் இருந்து மெக்கானிக்குகள் வந்தே திருத்த வேண்டியுள்ளது.

துணை அமைச்சரின் உத்தரவைத் தொடர்ந்து இனி பழுதுபடும் பஸ்களின் சாரதிகளே திருத்த வேலைகளை மேற்கொள்ளலாம்.

இதற்காக அவர்களுக்கு பழுதுபார்க்கத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## முச்சந்தி முரளி



அப்ப இனி டிரைவர்மார் சந்திக்குச் சந்தி பஸ்ஸைகளை நிப்பாட்டிப்போட்டு மெக்கானிகுகளாய் மாறிவிடுவினம் எண்டு சொல்லுங்கோ......!

## இன்று திருமலையில் ஆரம்பமாகவிருந்த ஆசிரியர் பயிற்சி நெறி ஒத்திவைக்கப்படலாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

இன்று திருகோணமலையில் ஆரம்பமாகவிருக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களிற்கான சேவைக்காலமுன்பயிற்சி மறு அறிவித்தல்வரை ஒத்தி வைக்கப்படலாம்என சம்பந்தப்பட்டவட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று ஆரம்பமாகும் பிரஸ்தாப பயிற்சியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 26 பேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆனால் இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு செல்வதற்கு தற்போது போக்குவரத்து வசதிகள் ஏதும் இல்லை என்பதால் அவர்கள் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேசமயம் திருகோணமலையில் தொடர்ந்து ஊரடங்கும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலைமையில் உத்தேச பயிற்சி நெறியை இன்று ஆரம்பிப்பது சாத்திய மாகாதுஎனச்சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. [உ-9]

### சுபநேரம்

17 - 04 - 1989
சித்திரை - 04
திங்கட்கிழமை

சுபநேரம்:
12.04 முதல் 01.34 வரை
ராகுகாலம்:
07.34 முதல் 09.04 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## ஏ. எஸ். பி. பதவி இறக்கம்

உதவி பொலீஸ் அதிபர் ஒருவர் இன்ஸ்பெக்டராக பதவி இறக்கப்பட்டார்.

இச்சம்பவம் ஊவாபொலீஸ் பகுதியில் இடம் பெற்றது.

பலாங்கொட என்னுமிடத்தில் தனி நபர் ஒருவருடன் குறிப்பிட்ட உதவிப் பொலீஸ் அதிபர் செய்து கொண்ட கொடுக்கல் வாங்கல் தகராறு சம்பந்தமான விசாரணையின் முடிவில் அவர் பதவி இறக்கம் செய்யப்பட்டார். (உ எ)

## யாழ். ஆஸ்பத்திரி முன்பாக இடம்பெற்ற மோதல்

### இருவர் உயிரிழந்ததாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சைக்கிளில் வந்த இளைஞர் குழு ஒன்று ஆஸ்பத்திரிக்கு முன்பாக நின்ற இளைஞர் குழுவை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது என்றும்-

இதனை அடுத்து ஆஸ்பத்திரி முன்பாக நின்ற இளைஞர் குழுவும் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டது என்றும்-

கிரனேட்டுகளும் அங்கு வெடிக்க வைக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

## ஜே. என். டிக்ஸிற் நேற்று பாக். தூதராகப் பதவியேற்பு

இஸ்லாமபாத் ஏப். 17

பாகிஸ்தானில் இந்தியத் தூதராக திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்று பதவி ஏற்றார்.

இது சம்பந்தமான நியமனப் பத்திரத்தைப் பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கானிடம் திரு. டிக்ஸிற் நேற்று உத்தியோகபூர்வமாக ஒப்படைத்தார். [உ-எ]

## இந்தியப் படை வெளியேற்றம் செவ்வாய் முதல் ஆரம்பம்

### 7 ஆயிரம் துருப்புகள் திரும்பும்

கொழும்பு, ஏப்ரல் 17

வடக்கு - கிழக்குப் பகுதியில் இருந்து இந்திய அமைதிப் படையினர் மேலும் வெளியேறுவது வருகிற செவ்வாய்க் கிழமையில் இருந்து ஆரம்பமாகும் என்று தெரியவருகிறது.

7 ஆயிரம் துருப்புக்களைக் கொண்ட அமைதிப் படையின் ஐந்து அணிகள் இன்னும் சில தினங்களில் தாயகம் திரும்பும் என்று கொழும்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-எ)

## ஆஸி. வீஸா பெறுவதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

கொழும்பு, ஏப்ரல் 17

ஆஸ்திரேலியா செல்வதற்கு வீஸா அனுமதி மறுக்கப்பட்டவர்கள் இந்தவாரம் அமுலுக்கு வர உள்ள தற்காலிக பிரமாணங்களுக்கு அமைய மீண்டும் விண்ணப்பிக்க முடியும்.

ஆஸ்திரேலியாவுக்கு வீஸா மறுக்கப்பட்டவர்கள் 240 ஆஸ்திரேலிய டாலர்களைக் கட்டணமாகச் செலுத்தி மீண்டும் விண்ணப்பிக்க முடியும் என்று குடிவரவு அமைச்சர் ரூபர்ட்றே நேற்று கன்பெராவில் தெரிவித்தார்.

குடிவரவுத் திருத்தச்சட்டம் ஆஸ்திரேலியநாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் வரை இன்று தொடக்கம் இத் தற்காலிக பிரமாணங்கள் அமுலில் இருக்கும்.

குடிவரவுத் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் தற்போது விவாதிக்கப்பட்டு வருகிறது. (உ-எ]

## கந்தர்மடம் குண்டு வெடிப்பு: மாகாண முதலமைச்சர் பாதிப்புற்றோரைப் பார்த்தார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து கந்தர்மடம் குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிட்டார்.

யாழ். மாவட்ட எம். பி. திரு. க. யோகசங்கரி, அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம், முதலமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் திரு.பீற்றர், மற்றும் வடக்கு-கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சருடன் வந்திருந்தனர்.

இவர்களை வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர் டாக்டர் என். நச்சினார்க்கினியன், யாழ். போதனா வைத்தியசாலை இயக்குநர் செல்வி சண்முகம் ஆகியோர் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

முதலமைச்சர் காயம் அடைந்தவர்களைப் பார்வையிட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்குத் தலா 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கும்படி யாழ். அரசாங்க அதிபரை மாகாண முதல்வர் பணித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பின்பு போதனா வைத்தியசாலைப் பகுதியை முதலமைச்சர் சுற்றிப் பார்வையிட்டார்.

போதனா வைத்தியசாலையை சுத்தமாக வைத்திருக்க வேண்டிய அவசியத்தை அவர் அங்கு வலியுறுத்தினார்.

## பலாலி வீதி நேற்றும் மூடப்பட்டிருந்தது

பலாலி வீதி ஊடாக கந்தர்மடம் முதல் திருநெல்வேலி வரையான பாதையும் அதனை சுற்றிய பகுதியும் நேற்றும் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பகுதியின் எல்லைகளில் அமைதிப் படையினரால் எச்சரிக்கைப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

பிரஸ்தாப பகுதியில் வெடி குண்டுகள் வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 17

கடந்த வெள்ளிக்கிழமை கந்தர்மடத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்த ஒருவர் நேற்று மரணமானார்.

இறந்தவர் திருநெல்வேலி வளாக ஒழுங்கையைச் சேர்ந்த சூசைமுத்து யேசுராசா எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## விடுதலைப் புலிகளுடன் ஏழுநாள் யுத்த நிறுத்தம்

லண்டன், ஏப்ரல் 17

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ள ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா, அதே வேளை பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு வசதியாக ஏழுநாள் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்கவும் தயாராக இருக்கிறார்.

-இவ்வாறு பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

## வெள்ளவத்தையில் நேற்று யாழ். பஸ் மீது கிரனேட் வீச்சு!

கொழும்பு, ஏப்ரல் 17

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்படவிருந்த தனியார் பஸ்களுக்கு கொழும்பில் வைத்து நேற்று மாலை ஒரு இடங்களில் கிரனேட் வீசப்பட்டது.

இந்தச் சம்பவங்களில் 4 பேர் படுகாயமடைந்ததாகத் தெரியவருகிறது.

முதலாவது சம்பவம் கொழும்பு தர்மபால மாவத்தையில் பிளவர் வீதியில் நேற்றிரவு 7 30 மணிக்கு இடம் பெற்றது.

இரண்டாவது சம்பவம் வெள்ளவத்தை காலி வீதியில் யாழ்ப்பாணத்திற்கான தனியார் பஸ்கள் புறப்படுவதற்காக தரித்து நிற்கும் இடத்தில்- வர்த்தக வங்கியின் வெள்ளவத்தை கிளைக்கு முன்பாக- இடம்பெற்றது. (உ)

## மீன்பிடித்தடை உத்தரவு வாபஸ்

குருநகர், ஏப், 17

பாஷையூர் பகுதி மீனவர்சன் நேற்றுக் காலை மீன் பிடிக்க படையினர் அனுமதி வழங்கினர்.

கடந்த மூன்று தினங்களாக அப்பகுதி மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே, [உ-51]

## 3 கோட்டக்கல்வி பணிமனைகள் புதிதாக யாழ் மாவட்டத்தில்

### மே 15 இற்கு முன்னர் இயங்கும்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணக் கல்வி மாவட்டத்தில் புதிதாக மேலும் மூன்று கோட்டக்கல்வி அலுவலகங்கள் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக திறந்து வைக்கப்படவுள்ளன.

இதன் பின்னர் மொத்தமாக ஐந்து கோட்டக்கல்வி அலுவலகங்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கும்.

ஏற்கனவே வடமராட்சிக் கோட்டக்கல்வி அலுவலகம் இயங்குவதும்,வேலணை கோட்டக்கல்வி அலுவலகம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டதும் தெரிந்ததே.

புதிதாக அமையவிருக்கும் கோட்டக்கல்வி அலுவலகங்கள் பற்றிய விவரம்வருமாறு:-

காங்கேசன்துறை, வட்டுக்கோட்டைக் கல்வி வட்டாரங்கள் இணைக்கப்பட்டு பண்டத்தரிப்புக் கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் இக்கோட்டக்கல்வி அலுவலகத்தின் அதிகாரியாக திரு. இ. சிவானந்தன் கடமையாற்றுவார்.

கோப்பாய், மானிப்பாய் கல்வி வட்டாரங்கள் இணைக்கப்பட்டு மருதனாமடத்தில் கோட்டக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும். இதற்கு அதிகாரியாக திரு. ஆர். கே. குலசேகரம் கடமைபுரியவுள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இஸ்ரவேல் தொடர்பை துண்டிக்க சிறிமா முயற்சி

### பிரேரணை கொண்டுவர முன் அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 17

இஸ்ரவேலுடனான இராஜரீகத் தொடர்புகளை இடைநிறுத்தம் செய்ய வேண்டும் என்று கோரும் பிரேரணையைக் கொண்டு வரப்போவதாக எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

அண்மையில் ஈராக் அரசின் அழைப்பை ஏற்று பக்தாத் சென்று விட்டு திருமதி பண்டாரநாயக்கா கடந்த வாரம் கொழும்பு திரும்பினார்.

அதைத் தொடர்ந்து இப்பிரேரணையைக் கொண்டுவரப் போவதாக அவர் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

''கைப்பற்றப்பட்ட அரபு பிரதேசங்களில் அடக்கு முறைகளை இஸ்ரவேல் நிறுத்த வேண்டும். ஐ. நா. அணிசேரா இயக்கம் ஆகியவற்றின் தீர்மானங்களை ஏற்று பலஸ்தீன விடுதலை இயக்கத்தை இஸ்ரவேல் அங்கீகரிக்க வேண்டும். அதுவரை இஸ்ரவேலுடனான சகல ராஜரீகத் தொடர்புகளையும் இலங்கை அரசு நிறுத்திவைக்க வேண்டும்'' -இப்படி பிரேரணை கூறுகிறது. (உ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனை

மலிவு விலையில் லவ் பேட்ஸ் கூட்டுடனும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. 195, கோவில்வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். [10584]

ஜப்பானிலிருந்துஇறக்குமதி செய்யப்பட்ட Unregistered Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. Our Lady Stores, 601, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [170]

நல்ல நிலையில்உள்ள Morris Minor Car விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: 40/25, வைமன்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [10597]

காட்டு விறகு தூக்கு 55/-. யாழ்நகரில் மலிவு விலை விறகு டிப்போ, ஐயப்பன் விறகு டிப்போ 81, செட்டித்தெரு நல்லூர். (10556)

பொமறேனியன் பிறவுண் நிறம் 1½ மாதக் குட்டிகள் பூச்சி அகற்றப்பட்டு உள்ளது. 249, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (10575)

### மில் விற்பனைக்கு

யாழ நகருக்கு அண்மையில் நெல் சந்தைப்படுத்தும் சபையால் பதியப்பட்ட அரிசி ஆலை விற்பனைக்குஉண்டு. தொடர்பு கொள்ளவும்! இல. 50, C/o உதயன். (10583)

### தவறிவிட்டது

பருத்தித்துறையைச் சேர்ந்த கணேசநாதன் கேதீஸ்வரநாதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 641410810V)யும் பல்கலைக் கழக அடையாள அட்டையும் வடமராட்சி அடையாள அட்டையும் பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து பருத்தித்துறை பஸ் டிப்போவில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [10600]

நாகலிங்கம் றவி ஆகிய எனது அடையாள அட்டை இல. 590923826V ஆஸ்பத்திரி வீதிக்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும். M. G. M. போறேஜ் ஸ்ரோர்ஸ் இல. 208. 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [169]

கதிரவேலு லோகநாதன் [I. C 541631160X] என்பவருடைய அடையாள அட்டை K.K.S மினிபஸ்ஸில் பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் R. B. [Booking Centre] புக்கிங் சென்ரர், நியு மார்க்கற்றில் ஒப்படைக்கவும். [168]

குமாரசாமி கமலாம்பாள் ஆகிய எனது அடையாள அட்டை இல. 398320980V கைப்பையுடன் 751 இல. பஸ்ஸில் 14-4-89இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [10588]

### கோழிக் குஞ்சு விநியோகம்

**UPLANDS FARM**

(Cobb) இன புறொயிலர் குஞ்சு 25-04-1989) செவ்வாய்க்கிழமை சகாய விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். [புகையிரத நிலையத்திற்கு அண்மையில்] (10580)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### ENGLISH TUITION

வீட்டிற்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். வயதுவந்தவர்கள், மாணவர் யாவருக்கும். தொடர்பு: C. K. மகாலிங்கம், C/o K. கனகசபாபதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [165]

### தேவை

அனுபவமுள்ள ஆங்கில மருந்து விற்பனையாளர் ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சுண்டுக்குழிக்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: மே/பா 486, உதயன். [178]

யாழ்நகரிலுள்ள பிரபலமான நகைக்கடை ஒன்றுக்கு சகல நகைவேலைகளும் தெரிந்த நகைத் தொழிலாளி ஒருவர் தேவை. விண்ணப்பதாரர் பிணைப்பணம் செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும். முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 484, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (124)

### பொதுஅறிவுப்போட்டி - 03

அன்பு கல்வி நிறுவனம் நடாத்தும் இப் போட்டி 1989-04-20 வியாழக்கிழமை மு. ப. 10 மணிக்கு நடைபெறும். மூன்று பணப் பரிசில்கள், பிரவேசம் 10 ரூபா 1989-04-19 ஆம் திகதிக் முன்பு பதிக. உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (3370)

### வேண்டுகோள்

சென்ற 2-4-89 ஞாயிற்றுக்கிழமை இரவு புளியம்பொக்கணையில் நடந்த கொள்ளையின்போது பறிக்கப்பட்ட என்னுடைய கொடியில் உள்ள தாலிக்கட்டியையும், காசையும் திருப்பித்தருமாறு உருக்கமாக வேண்டுகிறேன். திருமதி தம்பிப்பிள்ளை சின்னத்தங்கம், புளியம்பொக்கணை. [173]

### உங்கள் சேவை

மூன்று மொழிகளில், றபர் ஸீல்கள், பிளாஸ்டிக் பெயர்கள், விளம்பர போட், கிரெக், ஸ்கூல் பட்ஜ் யாவும் உடன் செய்துகொள்ள அலன் றபர் ஸீல்' 40A, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: வேலைகள் பயில ஆர்வமுள்ள பெண்கள் விண்ணப்பிக்கவும். (10520)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சு, கறுப்புசேவல் குஞ்சு (18-4-89) செவ்வாய்க்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். [தடுப்பூசி போடப்பட்டது.) முன்கூட்டியே பதிவுசெய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (134)


# வெலிஓயா என்ற பெயரில்

## புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா?

### சபையில் கேள்வி எழுப்ப அமிர் முன்னறிவித்தல்

கொழும்பு, ஏப்ரல். 17 வெலிஓயா என்ற ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா?

இது பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்புவதற்கு திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

வவுனியா, முல்லைத்தீவு, திருமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலிருந்து பல ஏக்கர் காணிகளைத் துண்டாடி உருவாக்கப்படும் இந்தப் புதிய மாவட்டம் 75 ஆயிரம் ஏக்கரைக் கொண்டதாக அமையும் என்று தெரிகிறது.

இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தத்தைத் தொடர்ந்து வன்முறை சதிநாசச் செயல்களில் ஈடுபட்டுள்ளோர்களுக்கான வேண்டுகோள் என்ற தலைப்பில் அரசாங்கம் விடுத்த அறிவித்தலில் வடமாகாணத்தின் கீழ் வெலிஓயா மாவட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது பற்றி வடக்கு-கிழக்கு மாகாண முதல் அமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் கருத்து வெளியிடுகையில் —

"வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா. மன்னார், முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களே உள்ளன. வெலிஓயா என்ற பெயரில் ஒரு மாவட்டமும் இல்லை. மத்திய அரசு இப்படி விஷமத்தனமான காரியங்களில் ஈடுபடுவது தமிழ் மக்களின் மனத்தைப் புண்படுத்துவதாகும்" — என்று தெரிவித்தார்- (இ-எ)

# விடுதலை பெறவே சிரமதானம்

"இந்திய சுதந்திரப் போராட்ட காலத்திலே சமூக, அரசியல், பொருளாதார ரீதியாக மக்களை ஒருமுகப்படுத்தி விடுதலை பெறச் செய்வதற்காக மகாத்மாகாந்தியினால் சர்வோதய தேசிய சிரமதான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

வடமராட்சி சர்வோதயப் பொறுப்பாளர் திரு. ப. தில்லைநாதன் வடமராட்சி சர்வோதய நிலையத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இலவச சங்கீத பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைக்கையில் மேற்கண்டவாறு கூறினார்;

திரு. தில்லைநாதன் தனது உரையில் மேலும் கூறியதாவது;

சர்வோதயத்தின் வழமையான செயற்பாட்டு அங்கங்களில் ஒன்று கலை, கலாசாரங்களை ஒவ்வொரு இனத்தினதும், மதத்தினதும்தனித்துவத் திறமையை வளர்த்தலாகும்.

இதன் அடிப்படையில் இன்று இந்த சங்கீதபயிற்சியை ஆரம்பித்துள்ளோம்.

கற்றற்கரிய கலைப் பொக்கிஷங்கள் கூட கடைச்சரக்காக மாறிவிட்ட இன்றைய காலகட்டத்தில் திறமையிருந்தும் வறியவர்களாகப் பிறந்துவிட்ட காரணத்தினால் இக்கலைகளைக் கற்பது எட்டாத கனியாகவே இருக்கிறது.

இந் நிலையை மாற்றி வறிய குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளும் இப் புனிதக் கலையைக் கற்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இப் யிற்சியை வழங்க ஏற்பாடுசெய்தோம்"

இப்படி அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா அரசினர் தமிழ் வித்தியாலய அதிபர் திரு. க. பரமானந்தம் கூறியதாவது, "தமிழர் பண்பாட்டுடன் ஊறிய இக்கலை அண்மைக் காலங்களில் அருகிவிட்டது.

இதற்குப் புத்துயிரளிக்கும் சர்வோதயத்தின் பணி போற்றற்கரியது" எனப் பாராட்டினார். [ச-118]

# குணப்படுத்த முடியாத நோய்கள்

## அக்குபஞ்சர்மூலம்குணமடைகின்றன

### வருடாந்தக் கூட்டத்தில் உரை

மானிப்பாய் ஏப்ரல் 17 வைத்தியத்துறையில் புதுப் புது முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அக்குபஞ்சர் முறையானது வைத்தியத் துறையில் அண்மைக் காலத்தில் பிரபல்யம் வாய்ந்து விளங்குகின்றது.

யாழ்ப்பாணம் அக்குபஞ்சர் சங்க வருடாந்த கூட்டம் யாழ் அக்குபஞ்சர் சங்கப்பணிமனையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் உரையாற்றும் பொழுது டாக்டர் புவிராசன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது "அண்மைக்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட அக்குபஞ்சர் முறையானது வேகமாக பரவி பிரபல்யம் அடைந்துள்ளது. இதற்கு காரணம் பல வைத்திய முறைகளால் மாற்ற முடியாது எனக் கைவிடப்பட்ட பல நோய்கள், நாள்பட்ட நோய்கள், தொய்வு போன்ற நோய்கள் இம் முறை மூலம் குணமாக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அக்குபஞ்சர் வைத்தியத்தில் இலவச சிகிச்சை நிலையம் ஒன்று அமைத்துச் செயற்பட எமது சங்கம் தீர்மானம் செய்துள்ளது.

வருடா வருடம் அக்குபஞ்சர் வைத்திய முறைகளைப் பலருக்குப் பயிற்றுவித்து வருகிறோம். சித்தியடைந்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கியுள்ளோம். மேலும் பலர் இம் முறையில் பயிற்சி பெற்று நேயாளர்களை குணமடையச் செய்ய முன்வர வேண்டும், இப்படி அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் அக்குபஞ்சர் சங்கத்தின் தலைவராக டாக்டர் எஸ். ரி. புவிராசன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

டாக்டர் எஸ். ரி. பூரணேஸ்வரன் செயலக்ளராகவும், டாக்டர் செல்வி எஸ். தனபால சரஸ்வதி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர், (ச - 90)

# மாணவர்களுக்கு இரண்டாம் தவணையில் சத்துள்ள மதிய உணவு வழங்கப்படும்

### அதிபர்கள் கூட்டத்தில் உரை

மானிப்பாய், ஏப்ரல் 17 யாழ்ப்பாணப் பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும் இவ்வருடம் இரண்டாம் தவணையில் இருந்து போஷாக்கான மதிய உணவு வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு நாளுக்கு மூன்று ரூபாவுக்கான சத்துணவை நாளாந்தம் பாடசாலைகள் தயாரித்து வழங்க வேண்டும்.

யாழ்ப்பாணம் பிரதி கல்விப் பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பி மானிப்பாய் வட்டாரப் பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் வட்டாரத்தை சேர்ந்த ஐம்பதுக்கும் அதிகமான பாடசாலை அதிபர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் தலைமை வகித்தார்.

கல்விப் பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பி மேலும் கூறியதாவது:

"ஆரம்ப கல்விக்கும் தொழிற் கல்விக்குமே இன்று முக்கியத் வம் கொடுக்கப்படுகின்றது. விஞ்ஞானக் கல்வி தொழிற் கல்வியுடன் இணைந்து போதிக்கப்பட்டால் தான் பயன்பெறும் என உணரப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு காலத்திற்கேற்ற நிலைமைகளை அனுசரித்து கல்வி புகட்டப்பட வேண்டும். எழுத-வாசிக்கப் பழக்குவதுடன் தொழில் வழிகாட்டலுக் கேற்ற கல்வி வழங்கப்பட வேண்டும்.

அண்மைக்காலங்களில் கல்வித்திணைக்களத்தினர் மொழி, வரலாறு, கவின்கலை, தொழில் [illegible] முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். பரீட்சைகளுக்கென மாணவர்கள் தம் பாடங்களை தெரிவு செய்யும் போது நாட்டுக்கும் சமூகத்துக்கும் பயன்படக்கூடியதான பாடங்களைத் தெரிவு செய்வதற்கு ஆசிரியர்கள் — அதிபர்கள் வழிகாட்ட வேண்டும்.

அதிபர்கள் பாடசாலையின் சூழல், பௌதிக வசதிகளை கவனத்தில் கொண்டு ஐந்தாண்டுத்திட்டம் ஒன்றை வகுத்து செயற்படவேண்டும். பாடசாலைகளின் வளர்ச்சி கருதி ஒவ்வொரு பாடசாலை அதிபரும் கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்களுடன் இணைந்து இவ்வாறான ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்துக்கொண்டு செயற்பட வேண்டும்.

பாடசாலைகளில் இன்று ஓரளவு பற்றுக்குறை நிவர்த்தி செய்யப்படடுள்ளது. எதிர்காலத்தில் மேலும் உள்ள பற்றுக்குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க உள்ளேன்"


இப்படி அவர் கூறினார். (ச-90)

# மட்டக்களப்பில் ஊரடங்கு நேர மாற்றம்

மட்டக்களப்பு, ஏப்ரல் 17 மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களின் நோன்புத் தொழுகைக்காக ஊரடங்குச் சட்ட நேரத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இரவு 11 மணிமுதல் அதிகாலை 4மணிவரை ஊரடங்குச் சட்டம் அங்கு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-21]

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி அ. கமலாதேவி B. A**

(அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)

தோற்றம்: 03 - 01 - 1948 மறைவு: 15 - 04 - 1981

எங்கள் குடும்பத்தின் ஞானவிளக்காக அன்பூற்றாக விளங்கி அபிவிருத்தி உத்தியோகஸ்தராக சமூக பொருளாதார மாதர் குல முன்னேற்றத்திற்கு அரும்பணியாற்றிய திருமதி கமலாதேவி B A நாம் கதறிக் கலங்கும்படி சடுதியில் சிவகதி அடைந்து ஆண்டு எட்டு கடந்துள்ளது. வேதனையில் உழலும் எங்களிதயங்களில் அன்னாரின் தரிசனம் கணம் தோறும் கிடைத்துத் தினம் நாம் செலுத்தி வரும் கண்ணீரஞ்சலியை நினைவு கூர்ந்து கண்ணீரோடு சிரம் தாழ்த்துகின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்:
தாயார், சகோதரன், மைத்துனி, மருமகன், சகோதரர்கள், சகோதரிகள், சிறிய தந்தையர்கள், சிறிய தாய்மார்கள், மாமன்மார், மாமிமார் மச்சான்மார், மச்சாள்மார்.

"அக்கா அகம்"
இணுவில். [180]

# இலங்கை விவகாரங்களை கையாள்கிறார் குல்திப் சகாதேவ்

புதுடில்லி, ஏப்ரல் 17 புதுடில்லியில் வெளியுறவு அமைச்சில் இணைச் செயலாளராகப் பணிபுரியும் திரு. குல்திப் சகாதேவ் தற்சமயம் இலங்கை விவகாரங்களைக் கையாள்கிறார்.

குறித்து இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடத்தவே திரு.

இருதரப்பு விஷயங்கள் சகாதேவ் கொழும்புக்கு அண்மையில் சென்றிருந்தார்.

அமைதிப்படையினரைக் கட்டம் கட்டமாக விலக்கிக் கொள்ளும் விஷயமும் அவர் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இடம்பெற்றிருந்தது.

திரு. சகாதேவ் கொழும்பில் நடத்திய பேச்சுக்களைத் தொடரவே சில தினங்களுக்கு முன்னர் இலங்கை வெளியுறவு அமைச்சுச் செயலாளர் திரு. பெர்னுட் திலகரத்தின புதுடில்லி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [இ-எ]

# இந்திய உதவிப்பொருள்

திருகோணமலை, ஏப்ரல் 17 வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு இந்திய அரசு வழங்கிய சில உதவிப் பொருள்கள் ரயில் வகன்மூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கு திருமலை ரயில் நிலையத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன,

உதவிப் பொருள்கள் முல்லைத்தீவுக்கு லொறிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன [இ-150]


நாளை ஆரம்பமாகவுள்ள புதிய பகுதிகள்

**A/L 89 (Physics)**

**DAY CLASSES (Mon to Fri)**

8.30 — 9.30 a.m ஒலியியல்
9 30 — 10.30 a.m மேற்பரப்பிழுவிசை
1.00 — 2.00 p.m M,W & F மின்னழுத்தம்
Tue & Thu நியூட்டனின் இயக்கவிதிகள்
2.00 — 3.00 p.m தொலைக்காட்டிகள்

ஆசிரியர்:

**R. சத்தியசீலன்**

**B. M. C. முன்லேன், யாழ்ப்பாணம்.**

[சி/2211]


## அஞ்சலி

### கனகரட்ணம் முருகரட்ணம்

எமது பழைய மாணவர் சங்க செயற் குழுவின் நீண்டகால உறுப்பினரான திரு. கனகரட்ணம் முருகரட்ணம் அகால மரணமானார் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அவர் குடும்பத்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றோம்.

**யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.**

16. 4. 89 [சி/2212]

## 1ஆம் வருட இதய அஞ்சலி



**திரு. கிருஸ்ணபிள்ளை திலகன்**

[புங்குடுதீவு, நயினாதீவு ப. நோ. கூ. சங்க ஊழியர்]

மலர்வு: 13 - 10 - 1957 உதிர்வு: 28 - 04 - 1988

திதி: 17 - 04 - 1989

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய்! பாசத்தின் பிறப்பிடமாய்! பார்வையில் பசுமரமாய்! சிரிப்பில் நிறைமதியாய், குடும்பத்தின் ஒளி விளக்காய்! அன்போடும் ஆதரவோடும் எம்மை ஆதரித்து இடைநடுவில் ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்ட எம் அன்புத் தெய்வமே எம் ஆன்மா பூமியை விட்டு அகலுமட்டும் தங்கள் திருவுருவம் எம் மனதை விட்டு நீங்காது!

P. திலகன் குடும்பத்தினர்

புங்குடுதீவு - 12 [179]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



✶ செல்வன் போல் அனக்கிளிற் ✶

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக் கொண்டவரும், மாகியம்பதியில் வசிப்பவருமான அருச்சுனன் - அருள் பிலோமினா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் போல் அனக்கிளிற் (அன்றூட்) தனது ''பற்றிமா இல்லத்தில்'' (17 - 04 - 1989) இன்று வெகு விமரிசையாக முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, ஞானத்தந்தை, ஞானத்தாய், அப்பாச்சி, அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மசசாள்மார், அக்காமார், அண்ணாமார் சகலரும் பல கலைகளும் பெற்று புனித செபஸ்தியாரின் அருளோடு பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(8)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### முதலாம் வருட விஞ்ஞானப் பரீட்சை

முதலாம் வருட விஞ்ஞான பயிற்சி நெறி மாணவருக்கான விலங்கியல் (ZG 12) செய்முறைப் பரீட்சை 28 - 04 - 1989 வெள்ளிக்கிழமை கீழ்வரும் அட்டவணைப்படி நடைபெறும்.

காலை
தொகுதி 1 — 8.30 — 11.30 வரை
மாலை
தொகுதி 2 — 12.30 — 3.30 வரை

எனவே, மேற்படி பரீட்சைக்கு சமுகமளிக்கும் மாணவர்களை 28. 04. 1989 அன்று தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பதில் பதிவாளர்.

(C/2275;



### யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

G. C E - O/L காலை, மாலை வகுப்புகள்
(புதிய, பழைய பாடத்திட்டங்கள்)
G C. E - A/L விஞ்ஞானம், வர்த்தகம்

G. A. Q.
SPOKEN ENGLISH
Short - Hand and Typing
இரு மொழிகள் மூலமும்

● தையல் ● மனையியல்
● தலைமயிர் அலங்காரம்
● ஐசிங்

ஆகிய வகுப்புகளின் புதிய பிரிவுகள்
19-4-89 ஆரம்பமாகின்றன.

(177)


யாழ். மாவட்டத்தில்

# பல் வைத்திய சேவை மீளாய்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

யாழ் மாவட்டத்தில் பல் வைத்திய சேவை மீளாய்வு செய்யப்பட உள்ளது.

இது தொடர்பான கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி காலை 8. 30 மணிக்கு நடைபெறும்.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் யாழ் பிராந்திய சுகாதார பணிப்பாளர் என். கனகசபை ஆரம்ப உரை நிகழ்த்துவார்.

மேற்படி கூட்டத்தில் யாழ் பிராந்திய பல் வைத்திய அதிகாரி, தொற்று நோய்த்தடுப்பு நிபுணர், தாய் சேய்நல வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரிகள், பல் வைத்தியர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

மக்கள் மத்தியில் பற் சுகாதாரத்தின் முக்கியத்துவம் பற்ற யாழ் பிராந்திய பல் வைத்திய அதிகாரிசள உரை நிகழ்த்துவர்.

பற்சுகாதாரம் பற்றிய சுகாதாரக் கல்வியை பற்சிகிச்சை நிலையங்களிலும், சமுதாய மட்டத்திலும் எப்படி முன்னெடுத்துச் செல்லலாம் என்பது பற்றி குழுநிலை விவாதம் நடைபெறும்.

கீழ்வரும் முக்கிய நோக்கங்களுக்காக இம் மீளாய்வு நடைபெறும்.

1. தற்போது பற்சிகிச்சை நிலையங்களில் செயல்பாடு பற்றிக் கணித்தல்.

2. பற்சிகிச்சையை நல்ல முறையில் செயல்படுத்தல் பற்றி ஆராய்தல்.

3. தகுந்த முறையில் பற்சுகாதாரம் பற்றி சிகிச்சை நிலையங்களிலும் கிராமிய மட்டத்திலும் திட்டமிட்டுச் செயல்படல்.

4. திணைக்கள ரீதியில் குறைபாடுகள், உபகரணங்கள் மற்றும் தேவைகளை அறிந்து ஆவன செய்தல்.

இதுவரையிலும் கூடுதலாக ப நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை வழங்கப்பட்டது.

இனிமேல் பற்சுகாதாரம் பற்றிய கல்வியறிவை மக்கள் மத்தியில் பரப்பி பல்வியாதிகளைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் முறையில் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும். 18

# கிளிநொச்சி குருகுலத்துக்கு சுவிஸ்திட்டம் 'ஓம்' நிதியுதவி

ஒட்டுசுட்டான் ஏப் 17

கிளிநொச்சியில் உள்ள கரைச்சி சைவவித்தியா விருத்திச் சங்கத்திற்கு சுவிஸில் இருந்து ரூபா 15, 000/- நன்கொடையாக கிடைத்துள்ளது.

கரைச்சி சைவ வித்தியா விருத்திச்சங்கத்தால் நடத்தப்படும் குருகுலம் தாபனத்திற்கு சுவிஸில் உள்ள 'திட்டம் ஓம்'' நிதி உதவியாக இலங்கைப் பிரதிநிதி திரு.கே ஆனந்தகிருஷ்ணன் ஊடாகப் பதினையாயிரம் ரூபா நன்கொடையாக கிடைத்துள்ளது.

''அண்மையில் இத்தாபனத்திற்குவிஜயம் செய்தஆனந்த கிருஷ்ணன் நிருவாகத்துடன் கலந்துரையாடி மாணவர்கள் மத்தியில் அறிவுரை வழங்கும் போது, மாணவர்கள் கல்வி கற்று முடிந்ததும் ஒவ்வொருவரின் திறமைக்கேற்ப தொழிற் பயிற்சி பெற்று சுயதொழில்களில் ஈடுபட வேண்டும்'' எனக் கூறினார்.

இத்தாபனத்தில் வதியும் ஏழைக்குழந்தைகளுக்கு பாலுணவுக்கு ரூபா ஐயாயிரமும் பசு வளர்ப்பிற்கும் இல்ல மாணவர்களின் உணவிற்கும் ரூபா பத்தாயிரமும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது (ச-113)

# ● கச்சேரி கேட்டவர்களை சிதறி ஓட வைத்த வேட்டு!

முல்லைத்தீவு, ஏப்ரல் 17

முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் விளையாட்டுப் போட்டியின்போது, கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், ஷெல் சத்தங்களும் மக்களைத் திணறடித்து திகிலடையச் செய்து, சிதறி ஓட வைத்தன.

கடந்த வியாழக்கிழமை 14ஆம் திகதி இரவு இச்சம்பவம் இடம் பெற்றது.

விளையாட்டுப் போட்டிகள் முடிந்து, பரிசளிப்புக்கு முன்னர் இன்னிசைச் சச்சேரி நடந்துகொண்டிருந்தது. அப்போது நேரம் சுமார் எட்டு மணி இருக்கும். மக்கள் கூட்டம் மெய்மறந்து இசையை ரசித்துக் கொண்டிருந்தது.

திடீரென பலத்த துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், ஷெல் சத்தங்களும் கேட்டன. மைதானத்தில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் அச்சம் கொண்டு முண்டியடித்த வண்ணம் சிதறி ஓட ஆரம்பித்தனர்.

தாய்மார் ஒருபுறமும், பிள்ளைகள் ஒருபுறமும் என்று அழுது குளறியபடி அவர்கள் ஒவ்வொருவரும்ஒவ்வொருதிக் சென்று ஓடினார்கள்.

துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், ஷெல்லடியும் இரவு சுமார் 11 மணிவரை தொடர்ந்தன.

சோமு தேவராசா என்பவரது வீட்டில் ஷெல் விழுந்து வீடுசேதமடைந்தது உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பணிபுரியும் வ. ம. நவரத்தினராசா என்பவரது வீட்டில் ஷெல் விழுந்து வெடித்ததில், அவர் பலத்த காயமுற்றார். பின்னர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஷெல் திகிலால் சிதறி ஓடிய பலரும் நேற்றுச் (சனிக்கிழமை காலை மைதானத்துக்குச் சென்று தமது நகைகள், அடையாள அட்டைகள், சைக்கிள்கள் என்பனவற்றைத் தேடிக்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (அ-92)

# நாட்டின் உயர்வுக்கு கூட்டுறவு இன்றியமையாதது

நெடுந்தீவு, ஏப்ரல். 17

நாட்டின் உயர்வுக்கு கூட்டுறவு இன்றியமையாதது. கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதில் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பு மகத்தானதாகும். கூட்டுறவாளர்கள் மத்தியில் அனுபவமும் ஆற்றலும் நிறைந்து காணப்படும். திறமை மிக்க அவர்களின் செயற்பாடுகள் உண்மையிலேயே கூட்டுறவின் தத்துவத்தை அடைய வழி வகுக்கும்.

இவ்வாறு யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொதுக் கூட்டத்தில் தலைமை உரையாற்றிய யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். ஐ. நித்தியராசா கூறினார்.

கூட்டுறவுச் சங்க சமாஜ முகாமைத்துவ செயற்பாடுகளில் அங்கத்தவர்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளைத் தணிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்க சட்ட விதி 18 [1] இன் கீழ் இக் கூட்டம் இடம் பெற்றது.

இதில் நூற்றிப்பதினெறு சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திருவாளர்கள் என். பத்மநாதன் (உதவி ஆணையாளர் எண்பார்வை), கூட்டுறவு உத்தியோகத்தர்களான திரு. ஞா. கேதீஸ்வரன், திரு. எஸ். சிவநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ச-111)

# சனசமூக நிலைய வேண்டுகோள்

நெடுந்தீவு, ஏப். 17

நெடுந்தீவு மேற்கு ஐக்கிய தீபம் சனசமூகநிலையம் தனக்கெனச் சொந்தக் கட்டடம் ஒன்றை அமைத்துள்ளது.

சனசமூகநிலையத்தின்வளர்ச்சிக்கு உதவுமாறும் சிறந்த பயனுள்ள நூல்களை நன்கொடையாக வழங்கி ஒத்துழைக்குமாறும் நிலையச் செயற்குழு பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது. [ச-111]

# 5 ஆம் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட

## மருந்து வகையும் விலை குறைப்பு

கொழும்பு, ஏப்ரல்.17

இம்மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கில மருந்து வகைகளும் 18 சதவீத விலைக் குறைப்புச் செய்தே விற்கப்படவேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாச இவ்வாறு உத்தரவிட்டார்.

ஏப்ரல் 5 ஆம் திகதிக்குப் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துவகைகளுக்குத்தான் விலைக் குறைப்பு என்று நினைப்பது தவறு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல ஆங்கில மருந்து வகைகளும் 18 சத வீத விலைக் குறைப்புக்கு கட்டுபட்டே விற்கப்படவேண்டும் என்று வற்புறுத்தும் வர்த்தமானி அறிவித்தல் சனிக்கிழமை இரவு வெளியாகி இருந்தது.

# ஓய்வுபெற்றகொத்தணி அதிபருக்கு ஆசிரியர்கள் பாராட்டு விழா

யாழ்ப்பாணம் ஏப் 17

வட்டுக்கோட்டை கொத்தணிப்பாடசாலைகள் அமைப்பின் நிருவாக அதிபராகவும், வட்டு இந்துக் கல்லூரி அதிபராகவும் இருந்து ஓய்வுபெற்ற திரு. நா. வேலுப்பிள்ளை அவர்களுக்கு பாராட்டுவிழா அதிபர்களாலும் ஆசிரியர்களாலும் வட்டு இந்துக் கல்லூரி வள்ளியம்மை மண்டபத்தில் வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு. எஸ்.டாஸ் தலைமையில் நடத்தப்பட்டது.

வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் திரு. வ. யோகானந்தசிவம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைமையுரையில்; வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலை அதிபர் திரு. எஸ். சி ... ா கீசர் அராலி ... வி வ அதிபர் திரு. எஸ். சண்முகநாதன், வட்டு மேற்கு அ.மி. த. க பாடசாலை அதிபர் திரு. எஸ். சிதம்பரநாதன், வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை ஆசிரியர் திரு. எஸ். சிவானந்தன், அராலி கிழக்கு அ. மி. த. க. பாடசாலை அதிபர் திருமதி ப. தர்மரத்தினம் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினார்கள். திரு. நா. வேலுப்பிள்ளை பதிலுரை வழங்கினார். வட்டு. திருநாவுக்கரசு வித்தியாசாலை அதிபர் திரு. நா. க. தங்கரத்தினம் நன்றியுரை கூறினார்கள்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் திரு. வ. யோகான ... னந்தசிவம் கலை நிகழ்ச்சி ...

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த தின வாழ்த்து



செல்வன் ஷியாம் பிரசாத்
(17-04-1989)

உடுவில் - கற்பொக்குளை பிள்ளையார் கோவிலடியைச சேர்ந்த சோமாஸ்கந்தசர்மா - நளினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஷியாம் பிரசாத் இன்று [17-04-89] தனது முதலாவது பிறந்த தினத்தை அட்டவில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

ஷியாம் பிரசாத்தை பெற்றோர்களுடன், உடுவில், தாத்தா, அம்மம்மா, சித்திமார், வீணா, அனுஷியா, மாமாமார், ரமேஷ், உமேஷ், ப்ரஸன்னா. ப்ரதீஸன், சாவகச்சேரி வரதராஜா சித்தப்பா, அட்டன் தாத்தா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், திவ்யா, ஸிந்துஜா, செந்தூரன், பாலுமாமா, ராஜீ அத்தை, கோகுல், டிக்கோயா ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவில் பெரியப்பா, பெரியம்மா, சோபிகா. ஜெய சண்முகன், பொகவந்தலாவை கோவில் பெரியப்பா, பெரியம்மா, தலவாக்கொல்லை பெரியத்தை, கணேஷ், பாலு, பவானி ஆகியோர் சகல செல்வங்களும் பெற்று விநாயகர் அருளால் நீடுழி வாழ வாழ்த்துகின்றார்கள். (C/2277)


லீலா என்ஜினியேஸ் பிறைவேற் லிமிட்டெட்
LEELA ENGINEERS (PVT) LTD.

லீலா என்ஜினியரிங் வேக்ஸ் மீண்டும் மாவிட்டபுரத்தில் Leela Engineers (Pvt) Ltd. என்னும் பெயருடன்

147, காங்கேசன்துறை - பிரதான வீதியில்
1-4-1989 தொடக்கம் செயல்படுகின்றது

- ✶ சகல இரும்பு வேலைகளுக்கும்
- ✶ விசேடமாக கனரக இரும்புத் தகடுகள் எந்த வடிவத்திலும் வளைத்து கொடுக்கப்படும்.
- ✶ குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
- ✶ சகல உதிரிப்பாகங்களும் எங்களிடம் நியாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

தலைமை அலுவலகம்:
LEELA ENGINEERS (Pvt) Ltd
COLOMBO - 13.
Telephone : 25933 - 546077.

[145

## தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் பதவிகள்

மானிப்பாய், ஏப்ரல் 17

உலோகவேலை, புடைவையும் உடையமைத்தலும் ஆகிய தொழில் நுட்பப்பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர்களை வலய அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை ஆசிரியர்களிடம் இருந்துயாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் கோரியுள்ளது.

இப்பாடநெறிகளில் ஆசிரியபயிற்சித்தராதரம் அல்லாது அதனையொத்த தராதரப் பத்திரத்தைப்பெற்ற பின்னர் ஐந்து வருடகால ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் இதற்கான விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.

விண்ணப்பங்களை அதிபர்களின் விதப்புரையுடன் அனுப்பி வைக்குமாறு ஆசிரியர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ச-90)


## வெளிநாடு செல்லவிருக்கும் வடபகுதி இளைஞர்களுக்கு

## அரியதோர் சந்தர்ப்பம்

● ஜேர்மனி ● பிரான்ஸ்

● ஹொலண்ட்

ஆகிய நாடுகளுக்கு விசாவுடன் கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாண ஒழுங்குகள் ஒரு வாரத்தில் செய்து கொடுக்கப்படும்.

முதலில் தொடர்பு கொள்ளும் இருபத்தைந்து பேர்களுக்கு மட்டும் முதல் வாரத்திலேயே பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

குறிப்பு: இப் பிரயாண ஒழுங்குகள் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டும்

பெண்களுக்கு: முப்பது வயதுக்கு மேற்பட்ட மூன்று பெண்களுக்கு மட்டும் மேற் குறிப்பிட்ட நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் முதல் வாரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகள்:

யாழ்ப்பாணத்தில்:
K. பரமநாதன்,
இல.13-ஆஸ்பத்திரிவீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

கொழும்பில்:
Dakhas Enterprises,
No.7, 2nd Floor,
Colombo Central
Super Market,
Colombo - 11.
Telephone No 545960.

[10582]


# மலையகத் தமிழ்ப் பாடசாலைகளில்
# ஆயிரம் ஆசிரியர் நியமிக்கப்படுவர்

நுவரெலியா, ஏப்ரல்.17

மலையகத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து நுவரெலியா கல்வித் திணைக்களத்தில் நடைபெற்று வருகின்றது.

இம்மாதக் கடைசி வரை நடைபெறவிருக்கும் இந்த நேர்முகப் பரீட்சையில் ஆயிரம் தமிழ் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட உள்ளார்கள்.

தெரிவின் பின் இவர்களுக்கு ஒரு மாத பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சிக் காலத்தில் செலவிற்கென அலவன்ஸ் வழங்கப்படும்.

பயிற்சியின் பின் மலையகத் தோட்டப் பாடசாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கே நேர்முகப் பரீட்சை நடைபெற்று வருகின்றது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி ஒரு சிலருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் தனிச் சிங்களத்தில் மட்டுமே இருந்தமையினால் தமிழ் பரீட்சார்த்திகள்கஷ்டத்துக்கு உள்ளாகினர். [ச-58]

# ஒவ்வொருவருடைய மனதிலும் உருவாகும் தன்னலமற்ற சிந்தனையே சேவை

### சர்வோதய பாலர் பாடசாலைக் கூட்டத்தில் உரை

பருத்தித்துறை, ஏப்ரல் 17

''சேவை செய்து வாழும் மனநிலையை விலை கொடுத்தோ ஒருவரிடம் வலிந்தோ பெற முடியாது. அது இயற்கையாகவே ஒவ்வொரு மனிதனது உள்ளத்திலும் இருந்து உருவாக வேண்டிய தன்னலமற்ற சிந்தனை ஆகும்''

புலோலி மேற்கு சர்வோதய பாலர் பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து உரையாற்றும் போது வடமராட்சி சர்வோதய பிரதேச இணைப்பாளர் திரு. ப. தில்லைநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

சர்வோதய பாலர் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எஸ். ஆதித்தன் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

திரு. தில்லைநாதன் தனது உரையில் மேலும் கூறியதாவது: ''இன்று பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பலருக்கு அதன் அர்த்தமே புரியாது.

எமக்கு முன் வாழ்ந்த பெரியார்கள் வாழ்க்கைக்காகத் தம் சொத்து சுகம் குடும்ப வாழ்வு அத்தனையும் ஏன் உயிரையும் கூட பொது வாழ்வுக்கு அர்ப்பணித்து அதன் மேன்மையை வளர்த்தார்கள். ஆனால் இன்று பொது வாழ்வுக்கு வரும் பலர் தம் சொந்த வாழ்க்கையை பலப்படுத்திக் கொள்ளவும் சமூகத்தில் தம் பெயரையும் புகழையும் நிலைநிறுத்திக் கொள்ளவுமே பொது வாழ்க்கை என்னும் இப் புனிதமான பெயரை பயன்படுத்துகிறார்கள் என்பது வேதனைக்குரிய தொன்றாகும்''

இ படி அவர் கூறினார். (ச-118)

### கல்விப்பணிப்பாளர் ஆசிரியர்கள் சந்திப்பு

சுன்னாகம், ஏப்ரல் 17

யாழ் மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி திலவகதி பெரியதம்பிவட்டார ரீதியாகப் பாடசாலைகளின் அதிபர்களைச் சந்தித்து பாடசாலைகளின் தேவைகள் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடி வருகிறார். (ச-27)

### கிராமசேவையாளர் நேர்முகப்பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

எதிர்வரும் 19ஆம் 20ஆம் திகதிகளில் யாழ் செயலகத்தில் நடத்தப்பட இருந்த கிராமசேவையாளர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் பின் போடப்பட்டுள்ளன. (ஒ-9)

# அதிக இலாபத்தைத் தேடும் கிளை முகாமையாளருக்கு சன்மானம்

தாளையடி ஏப்ரல் 17

கூட்டுறவுச் சங்கத்துக்கு அதிக இலாபத்தைப் பெற்றுத்தரும் கிளை முகாமையாளர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. வீ. எஸ். தியாகராசா கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களுக்கான கருத்தரங்கில் தலைமை வகித்து உரையாற்றுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

திரு. தியாகராசா தமது உரையில் மேலும் கூறியதாவது 'கடந்த காலங்களில் யாழ் மாவட்டத்தின் நெருக்கடியான காலத்தில் நிவாரண உணவுப் பொருள்கள் உட்பட சீரான உணவு விநியோகத்தை நியாயமான விலையில் கூட்டுறவுச் சங்கங்களே மேற்கொண்டு வந்தன' என்றார்.

இக் கருத்தரங்கில் பரந்தன் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். தணிகாசலம், இயக்குநர்கள் திருவாளர்கள் இராசரத்தினம் அ. அல்பிரட் ஆகியோர் உரையாற்றினார்கள். (ச-144)

# தமிழ் இலக்கிய உலகுக்கு பெரிய புராணம் ஓர் ஒளிவிளக்கு

### தொடர் சொற்பொழிவில் உரை

சாவகச்சேரி, ஏப்.17

பெரியபுராணம் என்பது தமிழ் இலக்கிய உலகுக்குக் கிடைத்துள்ள ஒளிவிளக்கு.

இறைவன் அருளை நாடி ஆன்மநேயர்கள் நோற்றதவங்களும், ஆற்றிய தொண்டுகளும் போற்றுதற்கரியன. தொண்டுகளிலெல்லாம் மனித குலத்திற்குச் செய்யும் தொண்டைத்தான் இறைவன் பெரிதும் விரும்புகிறான்.

ஆத்மஜோதி நா. முத்தையாநுணுவில் கிழக்கு கந்தசுவாமி கோவிலில் மண்டலாபிஷேகத் தினங்களில் நடத்தி வரும் பெரியபுராணத் தொடர்ச் சொற்பொழிவின்போது மேற்கண்டவாறு கூறினார்.

சிவஞானசாகரம் சிவஸ்ரீ கே. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இச் சொற்பொழிவில் அவர் தொடர்ந்து கூறியதாவது:

கந்தபுராணம், இராமாயணம், பாரதம் போன்றவை எல்லாம் வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்தவை.

ஆனால் பெரியபுராணம் ஒன்றுதான் தமிழிலிருந்துவடமொழிக்குச் சென்றது.

வடமொழியில் உபமன்னியு விலாசம் என்றபெயரால் இது வழங்குகின்றது.

பல பிறவிகளில் செய்த மாபெரும் புண்ணியம் துணை செய்தால் மட்டும் பெரியபுராணத்தைப் படிக்கும் பெருவாய்ப்பு ஒருவருக்குக் கிடைக்கும்.

நாயன்மார்கள் வேண்டாமை என்ற விழுச்செல்வத்தைப் பெற்றவர்கள் ஈரமும், வீரமும், வாரமும் ஒருங்கே உடையவர்கள்.— இப்படி அவர் கூறினார். [ச-31]

### குடிதண்ணீர் பிரச்சினை

புங்குடுதீவு ஏப்ரல் 17

புங்குடுதீவில்நல்ல தண்ணீர் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள கிணறுகள் வற்றி விட்டதால் மக்கள் மிக கஷ்டமடைகின்றனர். (இ-31)


# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,385 | 100,577,482 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,918 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,208,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க
"ஷப்ரு"வை நாடுங்கள்
நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.).
பொது முகாமையாளர்

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17
மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்பதாக, பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் கோரி விண்ணப்பித்த அனைவரினது அத்தாட்சிப் பத்திரங்களும் கடந்த புதன்கிழமை [12 ஆம் திகதி] தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

இதேவேளை மார்ச் 15-ஆம் திகதியன்று விண்ணப்பித்த 250க்கு மேற்பட்ட விண்ணப்பங்களுக்கும் அத்தாட்சிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்தத் தகவலை யாழ்.செயலக பிறப்பு இறப்பு அத்தாட்சி பத்திர விநியோகத்

## பிறப்பு - இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள்
# மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர்
## விண்ணப்பித்தோருக்கு அனுப்பப்பட்டன

திற்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக மார்ச் 15க்கு முன்பு விண்ணப்பித்தவர்களுக்கான பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மட்டுமே செயலகத்தில் விநியோகிக்கப்பட்டு வந்தது தெரிந்ததே.

இந்த விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு முடிந்து அத்தாட்சிப் பத்திரங்களும் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், மார்ச் 15 ஆம் திகதிக்கு பிந்திய விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

மார்ச் 15 ஆம் திகதிக்குப் பின்னர் வந்த விண்ணப்பங்கள் இதுவரை சுமார் 6 ஆயிரம் வரை உள்ளன. [க-9]

## ப, நோ. கூ. ச, சேவை விரிவாக்கம்

அச்சுவேலி, ஏப்ரல் 17
வலிகிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது கிளைநிலையங்களின் சேவையை மேலும் விரிவுபடுத்தியுள்ளது.

கிளைநிலையங்களில் பொது மக்களின் நாளாந்தப் பாவனைக்குரிய சகல உணவுப் பொருள்களையும் விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க-11]

# மனித உரிமைக் குழு; எதிரணி எம்.பிக்கள் அமைத்தனர்

எதிர்க்கட்சி எம்பிக்கள் மனித உரிமைக் குழு ஒன்றை அமைத்துள்ளனர்.

இக் குழுவிற்கு மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும் கொழும்பு மாவட்ட எம். பியுமான திரு. தினேஷ் குணவர்த்தன தலைமை வகிக்கிறார்.

இந்த குழுவின் முதல் கூட்டம் விரைவில் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

கேகாலை மாவட்ட எம். பி தர்மசிறி சேனநாயக்கா குழுவின் செயலாளர் ஆவார்.

எம். பிக்களான வாசுதேவ நாணயக்கார, நந்தா எல்லாவல, கந்தையா நவரத்னம், ஜனுப் ஹிஸ்புல்லா ஆகியோர் உப தலைவர்கள். அமைப்புச் செயலாளர் மகிந்த ராஜபக்ஷ. [உ-எ]

## மிளகாய் விலை இறக்கம்

வன்னிப்பகுதியில் மிளகாயின் விலை திடீரென வீழ்ச்சி அடைந்துள்ளது.

கடந்த சில நாட்களாக ஒரு கிலோ மிளகாய் 80 ரூபாவாக விற்பனையானது.

தற்பொழுது திடீரென 40 ரூபாவாக விற்பனையாகின்றது.

## செஞ்சிலுவைச் சங்க உதவி

மிகவும் கூடுதலான பாதிப்புக்கு உள்ளான மீனவர்களுக்கு வலைகள் போன்ற மீன்பிடிச் சாதனங்களை உதவியாக வழங்க யாழ் செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் பற்றிய விவரங்களைத்திரட்டும் வேலைகளில் நெடுந்தீவு செஞ்சிலுவைச்சங்கப்பிரதிநிதிதிரு. நா. கணபதிப்பிள்ளை ஈடுபட்டுள்ளார். [இ-111)

## ரூபா 10 லட்சம் நிதி ஒதுக்கீடு

தாளையடி, ஏப்ரல் 17
மருதங்கேணியில் நிரந்தரமாக புதிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகக் கட்டடத்தை அமைப்பதற்கு 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய கட்டடம் மருதங்கேணியில் உள்ள 4 ஏக்கர் அரசாங்க காணியில் கட்டப்படும். (உ - 144)

## வங்கிக்கிளை நிவாரணம்

முல்லைத்தீவு, ஏப்ரல் 17
புதுக்குடியிருப்பு, மண்ணு கண்டல், வற்றுப்பளை, அளம்பில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 1650 குடும்பங்களுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிவாரணத்தை இலங்கை வங்கி முல்லைத்தீவுக்கிளை, கடந்த 31 ஆம் திகதி முதல் வழங்கி வருகிறது. (க - 92)

## விவசாயிமீது சூடு!

ஒட்டுசுட்டடான், ஏப். 17
ஒலுமடு குளக்கட்டுப் பிள்ளையார் கோவிலடியில் சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றதுப் பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் கு. விக்கினமகாராசா (வயது 50) என்ற விவசாயி படுகாயமடைந்தார்.

பிள்ளையார் கோவிலுக்குப் பொங்கலுக்காகச் சென்று கொண்டிருந்தபோது அப்பகுதியிலுள்ள சென்ரி ஒன்றிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டுக்கு அவர் இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது சிகிச்சைக்காக அவர் வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். (உ-113)

## கோழி வளர்ப்பு திட்ட வைபவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17
பூநகரி அபிவிருத்தி, புனர்வாழ்வுக் கழகம் நடத்தும் பாதிக்கப்பட்ட கூட்டுறவு மகளிருக்கான கோழிவளர்ப்புத் திட்டத்தின் ஆரம்ப வைபவம் இன்று 17 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறும். (க)

## கலைவாணி க.வி. கலைவிழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17
வட்டுக்கோட்டை அராலி வடக்கு கலைவாணி விளையாட்டுக் கழகத்தின் 42 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழக நாடக மன்றம் நடத்தும் கலைவிழா 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என மேற்படி விளையாட்டுக் கழகச் செயலாளர் தெரிவிக்கின்றார். (க)





எதிர்காலத்தை திடநம்பிக்கையுடன் எதிர்கொள்ளுங்கள்

வாழ்க்கையில் மாறிவரும் பலவகை தேவைகளை எதிர்கொள்ள

வாழ்க்கை இனிமையானது. ஆனந்த உணர்ச்சியுடன் அனுபவிக்க வேண்டியது. வாழ்க்கையின் சவால்களையும், கடமைகளையும் மனதில் கொண்டு சீ. ரீ. சீ. ஈகிள் உங்கள் நல்வாழ்வுக்கென்றே வடிவமைத்த கூட்டுத்திட்டங்கள் மூலமாக இன்றே நீங்கள் வாழ்க்கையை இனிமையாக அனுபவிக்கலாம்.
திருமணம், புதிய வியாபாரம், குடும்பத்தில் புதிய வாரிசுகள், கல்வி, ஓய்வுபெறுதல் எதுவானாலும் நீங்கள் மனநிறைவுடன் அவற்றை எதிர்கொள்ளலாம்.

உத்தரவாதமுள்ள முதலீட்டு இலாபத்துடன் கூடிய சேமிப்பு

நீங்கள் கட்டிய முதல் தவணைக் கட்டணத்தின் மூலமாக உங்களுக்கென்றே உருவாக்கப்பட்ட முதலீட்டு நிதி ஒன்றிற்கு நீங்கள் அத்திவாரம் இடுகின்றீர்கள். இந்த நிதி பணவீக்கத்தினால் பாதிப்படையா வண்ணம் வாய்ப்புகள் உண்டு. நாம் சிறந்தமுறையில் தவணைக்கட்டணங்களை முதலீடு செய்து உங்களுக்கு அதிக இலாபம் பெற்றுத்தருவோம். உங்களுக்கு இலாபப் பங்கு கிடைக்கும் என்ற எங்கள் உறுதியான உத்தரவாதத்துடன் அவை உங்கள் சொந்த முதலீட்டுக்கணக்கில் தொடர் வட்டியுடன் வளர வசதி செய்யப்பட்டுள்ளது. உங்கள் காப்புறுதி முதிர்ச்சி அடையும்போது கூடுதலான முதிர்வுத் தொகை உங்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

உங்கள் நலன் எங்கள் கருத்தில்

எங்களுடன் ஆயுட்காப்புறுதி செய்வது மிக இலகுவானது. உங்களுக்கு சிரமம் ஏற்படாவண்ணம் கூடுதலான காப்புறுதித் தொகைக்கும், வைத்தியப்பரிசோதனையின்றி மிக இலகுவான தனிப்பட்ட முறையில் காப்புறுதி செய்து தருவதுடன் கொடுப்பனவுக் கோரிக்கைகளையும் உடன் பூர்த்தி செய்து தருவோம் என்ற உத்தரவாதம் அளிப்போம்.
வாழ்வில் மாறிவரும்தேவைகளை எதிர்கொள்ளவும், உங்கள் தனிப்பட்ட தேவைகளை நிவர்த்தி செய்யவும், வளைந்து கொடுக்கும் தன்மையுள்ள நிகரற்ற பல கூட்டுத்திட்டங்கள் எம்மிடம்உண்டு. உங்கள் தேவைகளுக்கு ஏற்ப வரையறையின்றி எத்தொகைக்கும் எங்களுடன் காப்புறுதிசெய்து கொள்ளலாம் உங்கள் வசதிக்கேற்ப காப்புறுதியை தேவையான காலத்திற்கு நீடித்துக்கொள்ளவும்,, கூடுதலான முதலீட்டு இலாபத்தைப் பெறவும் வசதி உண்டு.
''நல்வாழ்வுக்கான காப்புறுதி'' உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் வாழ்நாள் பூராவுக்குமான ஒரு பங்காளிப்பிணைப்பு ஆகும். பொருளாதார சூழ்நிலையால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் அனைத்திலும் உங்களுடன் நாம் பக்கத்துணையாய் என்றும் இருப்போம். பொறுப்புகளை எங்களிடம் ஒப்படைத்து ஆனந்த வாழ்வை அனுபவியுங்கள் ஆயுட்காப்புறுதியில் இறுதிவரை நீங்கள் எதிர்பார்ப்பது இதைத்தானே? எதிர்காலத்தை திடநம்பிக்கையுடன் எதிர்கொள்ளுங்கள்.

சீ.ரீ.சீ. ஈகிள்
இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்

[illegible] தொலைபேசி: 21670/79/80/81.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முகம்

## தகுதிச் சான்றிதழ் பெற்ற இலங்கையர்



கு. முரளி

யாழ்ப்பாணம் ஏப் 17

இளவாலை சலங்கை ஒலியைச் சேர்ந்த திரு. அ. ச. குருகுலசிங்கம் புவனேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வருமான முரளி சர்வதேச வணிகக் கணக்காளர் சங்கத்தின் தகுதிச்சான்றிதழ் பெற்றுள்ளார்

1988 ஆம் ஆண்டு செப்டம்பரில் மேற்படி சான்றிதழைப் பெற்ற ஒன்பது பேரில் இவர் ஒருவர் மாத்திரமே இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் கொழும்பு இந்துக்கல்லூரியினதும் யாழ் பரியோவான் கல்லூரியினதும் பழைய மாணவராவார் [ச]

## தபால் அதிபர்

அச்சுவேலி, ஏப்ரல் 17

அச்சுவேலி தபால் நிலைய தபால் அதிபராக திரு. எஸ். பொன்னுத்துரை நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் ஹட்டன் தபால்நிலையத்தில் தபால் அதிபராக கடமையாற்றினர். (க-11)

ஜொனியன்ஸ் நடத்தும் கிரிக்கெட்:

# ஷப்ரு அணி மற்றொரு வெற்றி

## மாலை நடந்த ஆட்டத்தில் கொக்குவில ச.ச. நிலையம்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 17

பெனின்சுலாகுழுப்பின் ஆதரவுடன் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டிகளில் 15 ஆம் திகதி காலை நடைபெற்ற ஆட்டத்தில் ஜொனியன் (ஏ) விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய ஷப்ரு விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

(முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன் ஏ) விளையாட்டுக் கழகம் 29.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது.

புவனரட்ணம் 27, கணேஸ் பஞ்சன் 22, சஞ்சீவன் 20, ரவீந்திரா 12, சதீசன் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் தயாளன் 4, விக்கெட்டுக்களையும், வரதன் 2 விக்கெட்டுக்களையும், எஸ். பி. எஸ். இளங்கோ, பிரபாநந்தன். சுரேஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய ஷப்ரு அணி 26.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

பிரதீபன் 3 சிக்சர்களை உள்ளடக்கிய 33 ஓட்டங்களையும், பிரபாநந்தன் 44, விஜயகுமார் 18, அன்றூ கிறேஷியன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ரவீந்திரா 2 விக்கெட்டுக்களையும், முரளி, சதீசன், சஞ்சீவன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

### மாலையில்

மாலை நடைபெற்ற ஆட்டத்தில் சென்றலைட் (நீல) அணியை எதிர்த்து ஆடிய கொக்குவில் சனசமூக நிலைய அணி வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட் அணி 27 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

சாந்திரன் 30, விஜயநாதன் 27, சிவச்சந்திரன், விக்னேஸ்வரன் ஆகியோர் தலா 18 ஓட்டங்களையும் ரஜீவன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் துஷ்யந்தன் 3 விக்கெட்டுக்களையும், செந்தில்வேல்நாதன், கோகுலன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் சனசமூக நிலைய அணி 23.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

விஸ்வநாத் 37, பாலகுமார் 26, கோகுலன் 24, உமா சங்கர் 2 சிக்சர்கள் அடங்கிய 24 ஓட்டங்களையும் நற்குணேந்திரன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சண்முகலிங்கம். அரசரட்ணம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் விஜயநாதன், சாந்திரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர். [இ-6]

வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாலயம்

# மாணிக்கர் இல்லம் சாம்பியன்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் மாணிக்கர் இல்லம் 437 புள்ளிகளைப் பெற்று சாம்பியனானது.

அப்பர் இல்லம் (357 புள்ளிகள்), சுந்தரர் இல்லம் (329 புள்ளிகள்) ஆகியவை இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்றன.

வித்தியாலய அதிபர் திரு. சு. சிவவாகீசர் தலைமையில் நடைபெற்ற இப் போட்டிக்கு வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகளின் நிர்வாக அதிபர் திரு. எஸ். தாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

போறூட் ஸ்காபனசிரேஷ்ட திட்ட இணைப்பு [illegible] தர் திரு. எஸ். சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அணிநடை அஞ்சல் ஓட்டப் போட்டிகளுக்கான வெற்றிக் கிண்ணத்தை மாணிக்கர் இல்லம் சுவீகரித்தது.

சிறந்த விளையாட்டு வீரனுக்குரிய வெற்றிக் கிண்ணம் செல்வன் க. கவிதாசுக்கும் சிறந்த வீராங்கனைக்கானவெற்றிக் கிண்ணம் செல்வி அ. ஜேவினிக்கும் வழங்கப்பட்டன.

திருமதி கே. தாஸ் பரிசில்களை வழங்கினர். (ச)

## சட்ட விரோத மின்சார பாவனைக்கு எதிராக நடவடிக்கை

மானிப்பாய், ஏப்ரல் 17

மானிப்பாய் பட்டின சபைக்குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுபவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மானிப்பாய் பிரதேச அபிவிருத்திச்சபை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

உச்சியோடை, இராசகாரியர் வீதி, ஆனந்தா வீதி, மெமோறியல் வீதி ஆகிய இடங்களுக்கு கடந்த வாரம் விஜயம் செய்த அதிகாரிகள் அங்கு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்தவர்களின் மின்சார வயர்களை அறுத்தும் எச்சரித்தும் சென்றுள்ளனர். (ச-90)

# துரித வேகத்தில் இயங்கும் ஜனசக்தி உபகுழுக்கள்

முல்லைத்திவு, ஏப்ரல் 17

முல்லைத்திவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜனசக்தி உபகுழுக்கள் துரித வேகத்தில் ரூபா 2500 பெறத் தகுதியான குடும்பங்களைத் தெரிவதில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு முல்லை உதவி அரசாங்க அதிபர் திரு. வி. சுந்தசாமி ஊக்கமளித்து வருகிறார்.

முல்லைத்திவு தெற்கு கிராம சேவை உத்தியோகஸ்தர் பிரிவில் உள்ள கரைச்சிக் குடியிருப்பில் அறுபது குடும்பங்களில் 20 குடும்பங்களே ஜனசக்தித் திட்டத்தின் கீழ் தகுதி பெற்றுள்ளது.

மிகுதி 40 குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டு வீடுகளைவிட்டு இந்திய அமைதிகாக்கும் படையினரால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அயல் இடங்களில் வசித்து நிவாரணப் பொருள்களைப் பெற்றுவருவதால் இவர்கள் ஜனசக்தித் திட்டத்தில் சேர்க்கப்படமாட்டார்கள். என்று முல்லைத்திவு தெற்கு கிராம சேவகர் ஜெயநாதன் அறிவித்துள்ளார். (ச-92)

## பளை - யாழ் பஸ்சேவை

பச்சிலைப்பள்ளி ஏப்ரல் 17

பளையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு காலை ஆறு மணிக்கு சேவையிலீடுபடுத்தப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டுள்ள பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். [க-117]

## ஓய்வு பெற்றார்

குருநகர், ஏப்ரல் 17

யாழ் - புனித சாள்ஸ் மகாவித்தியாலய உப அதிபர் திரு. ஆர். அல்போன்சஸ் ஓய்வு பெற்றார். (க-51)

பளையில்

# இலக்கஞ்சி வழங்கும் திட்டம்

பச்சிலைப்பள்ளி ஏப்ரல் 17

பாலர் பாடசாலை சிறுவர்களுக்கு இலக்கஞ்சி வழங்கும் திட்டத்தை பளை, உதவி அரசாங்க அதிபர் சு. கந்தசாமி இந்திராபுரம் அன்னை இந்திரா பாலர் பாடசாலைச் சிறுவர்களுக்கு இலக்கஞ்சி வழங்கி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இத்திட்டம் இப்பகுதியிலேயே முதலில் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்திராபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் திரு. இ. கனகசபையின் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பகுதியைச் சேர்ந்த திருமதி த. மாணிக்கவாசகர் கிறுவர் சேமை சங்கத்தின் சார்பில் பற்பசைகளையும் தூரிகைகளையும் சிறுவர்களுக்கு அன்பளிப்பாக வழங்குகின்றார்.

ஆசிரியை செல்வி இ. கமலாசனி நன்றியுரை கூறினார். க-117)

# இளைஞர் சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 17

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான இளைஞர் ஒருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்தவர் அரியாலையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை பிரபா (வயது 22) என பின்னர் அடையாளம் காணப்பட்டது. (உ-9)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 — 10 — 1915 | 28 — 04 — 1988 |

உயர்திரு

## ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை

திதி: 17-04-1989

ஓராண்டு சென்ற தென்று அழுகின்றோம் ஐயாவே! அழுத இரு கண்கள் இன்னும் ஓயவில்லை. மாண்டு விட்டீர்! குண்டு பட்டு வரமாட்டீர் மானிலத்தில் பாண்டுவின் பிள்ளைகளும் பட்டதுயர் யாரறிவார். வேண்டுகின்றோம் என் நாளும் உன் ஆத்மா சாந்தி அடைய வேண்டி நிற்கும்:

அன்பு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

187, ஆறுமுகம் றோட், வட்டக்கச்சி.

(171)

# உதவிவைத்திய அதிகாரிகளுக்கான விளம்பரம்

கிராம மட்டத்தில் சமூக, பொருளாதார, புனருத்தாபன வேலைகளை மேற்கொண்டுள்ள புனருத்தாபன சேவை நிலையம் ஒன்றிற்கு முழு நேரமும் கடமைபுரியக் கூடியவரும், பத்து வருட அனுபவமும் தகுதியையும் உடையவரும் ஆகிய R. M. P. அல்லது A.M.P. அல்லது D.A.M.S. தேவைப்படுகின்றார்கள். விண்ணப்பங்கள் யாவும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் உதவி வைத்திய அதிகாரிகளுக்கான விண்ணப்பம் என எழுதப்பட்டு 30 - 04 - 89 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வண்ணம்

C/o உதயன், நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

[10589]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## திருமதி இராசதுரை மனோன்மணி

(இணுவில் தெற்கு)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 17 - 08 - 1914 | 18 - 3 - 1989 |

நம் குடும்பத்தை வழி நடத்திய குலவிளக்கே: பாசத்தின் திருவிளக்காய் திகழ்ந்த திருவிளக்கே! காரிருளில் ஒளி தந்த ஒளி விளக்கே! காலம் எல்லாம் உன் நினைவு காத்திருப்போம்.

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மறைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள். பேரப்பிள்ளைகள், சகோதரங்கள், உறவினர்கள்.

பபி, பெவுன் கவுஸ்
கண்டி றோட்,
கிளிநொச்சி.

(172)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சுன்னாகம்

## திருமதி நாகரத்தினம் நடராசா

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 7—11—1926. | 28—4—1988. |

ஆண்டுத் திதி; 17—4—89

அன்பின் உருவாய், அறிவின் சுடராய்
பண்பின் நிறைவாய், பாசத்தின் பிறப்பிடமாய்,
வாழ்ந்து, ஊருக்கும் எமக்கும் வாரி வழங்கி
நல்வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே
எம்மைவிட்டுத் திடீரெனப் பிரிந்து
ஓர்ஆண்டு என்ன ஓர்ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம்உயிர் உள்ளவரை உங்களை எம்மனதில் நிறுத்தி
பூஜைசெய்து வழிபட்டுக்கொண்டே இருப்போம்..

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள். பேரப்பிள்ளைகள்

ராஜபவனம்,
கந்தரோடை வீதி,
சுன்னாகம்.

[160]


# Diploma in Computer Programming & Data Processing

| | BASIC | d. Base III + |
|---|---|---|
| DURATION | 4 Months | 2 Months |
| COMMENCEMENT | 24-04-89 | 02-05-89 |
| DAYS | Mon. Wed | Tue. Fri |
| TIME | 8.30 to 10.30 | 8.30 to 10.30 |
| MONTHLY FEES | 300/- | 600/- |

- Practicals on computers including I B M (Compatibles)
- More practical time
- Lectures by members of the Institute of Data Processing Management (London)
- Valuable certificate

JOIN THE LEADERS

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd, Cross Street,
(Near O L R Church)
Jaffna.

[C-2278]


# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி பொன்னையா மனோன்மணி

| அன்னையின் அணைவில்: | ஆண்டவனின் அழைப்பு: |
|---|---|
| 30 - 12 - 1913 | 28- 04- 1988 |

திதி: 17- 04- 1989

அம்மாவே அம்மாவேயென்று கதறினாலும் பிரிந்த ஆத்மா திரும்ப வருமோ? இல்லையே இல்லை. ஆகவே அம்மாவின் ஆத்மா சாந்தியடையத் தினமும் ஆண்டவனைப் பிரார்த்திக்கும்:

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

'கணேச வாசம்'
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை

(133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

பொருட் பெண்டிர் பொய்ம்மை
முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீ இ யற்று.

**பொருள்:**

பொருளையே விரும்பும் பொதுமகளிரின் பொய்யான தழுவுதல், இருட்டறையில் தொடர்பு இல்லாத ஒரு பிணத்தைத் தழுவினுற் போன்றது.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
17- 04 - 1989 • பெ இல: 23


## அத்துமீறல் ஆபத்து!

ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் முன்னர் எப்பொழுதும் இல்லாததைவிட, உத்வேகம் அடைய வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டிருக்கிறது!

எந்த ஒப்பந்தமும் பயன்தரப் போவதில்லை என்ற பழைய பாடத்தைப் புதிதாகச் சிந்தையில் செறித்து, எல்லோரும் ஒன்றுபட்டு உரிமைப் போரைச் சக்தி மிக்க தாக்க வேண்டிய அவசரம் உருவாகியுள்ளது,

ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைகளில், முதன்மையானது, மூலஸ்தானம் போன்றது இலங்கை நாட்டில் தமிழர்களுக்கு என்று ஒரு தாயகம் உண்டு என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், அங்கீகரிக்கப் படவேண்டும் என்பதே. வடக்கும், கிழக்கும் இணைந்த பிரதேசங்கள் தமிழர்கள் நிரந்தரமாக வாழும் பகுதி என்பது வரலாறு; நடைமுறையிலும் இருந்த ஒன்று.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முனைந்த போதெல்லாம், முயற்சி எடுத்த வேளை எல்லாம், வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகமும், அப்பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதும் இடைவிடாது வற்புறுத்தப்பட்டவை.

ஆனல் அவை செயல் வடிவம் பெறவில்லை. மாறாக சிறிலங்கா அரசுகளின் சதிநாசமான அரசு ஆதரவுக் குடியேற்றத் திட்டங்கள், 'அல்லையில் தொடங்கி இப்போது வெலிஓயாவில் வந்து நிற்கின்றன. (முற்ருக முடிந்து விட்டதாகச் சொல்வதற்கில்லை)

சிறிலங்கா அரசாங்கங்கள் நிலைநாட்டிய பல பெரிய குடியேற்றத் திட்டங்களில் வெலிஓயா தனித்தன்மையது; தமிழர்களின் முதன்மை உரிமைக்கு முற்ருக முட்டுக்கட்டை, தடைக்கல் போடுவது என்பதை உணர்ந்து கொள்ளுதல் முக்கியம்.

வடக்கு-கிழக்குத் தொடர் நிலப்பரப்பை முக்கிய— கேந்திர— இடத்தில் வைத்து வெட்டிவிடும், துண்டாடிவிடும் ஆபத்து நிறைந்தது!

அதனுல் தான் ஜே. ஆர். அரசு தனது சதியை வெகு இரகசியமாகவும், சாதுரியமாகவும் செய்து—

மகாவலிப் பிரதேச விஸ்தரிப்பு என்ற பெயரில் 43 தமிழர் கிராமங்களைப் பறித்து எடுத்து, 13,500 தமிழ்க் குடும்பங்களை நிர்ப்பந்தமாக வெளியேற்றி—

அவர்களின் 75,000 ஏக்சர் நிலத்தையும் சுவீகரித்து அதில் 15,000 சிங்களக் குடும்பங்களைக் கொண்டு வந்து குடியேற்றி—

சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர், 15-4-1988இல் விசேட வர்த்தமானி மூலம் அதனைச் சிறப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி எல்லை விவரங்களையும் வெளியிட்டுவிட்டு— வெகு அமைதியாக இருந்துவிட்டது. தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை, முதன்மை உரிமையைப் பறிக்க வெகு சாதுரியமாகக் கருமமாற்றி விட்டு அமைதியாக இருந்துவிட்டது.

உண்மை எப்போதாவது அம்பலத்துக்கு வரும் என்பதற்கு ஒப்ப விஷயம் தெரிய வந்ததும் தமிழர் தரப்பில் இயன்றவரை ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. ''துண்டாடல் வேண்டாம்'' என்று இப்பத்தியிலும் 18-9-1988 இதழில் இடித்துரைத்தோம்.

ஜே. ஆர். அரசுக்கு, அவை எல்லாம் எருமை மாட்டின்மேல் பெய்த மழை' ஆயிற்று. அது கருமமே கண்ணுக இருந்து மணல் ஆறை வெலிஓயா ஆக்கி, அதனை ஒரு மாவட்டமாக உருஅமைத்து செயல் வடிவம் கொடுத்து முடுக்கிவிட்டிருக்கிறது!!

இல்லையெனில், அண்மையில் அரசாங்கம் வெளியிட்ட அறிவித்தல் ஒன்றில் வெலிஓயா மாவட்டம் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பது எவ்வண்ணம்? பிரேமதாச அரசும் ஆசாடபூதிப் பூசாரித்தனத்தில் இறங்கிவிட்டதா?

புதிய மாவட்டம் ஒன்று உருவாக்கப்பட்டால் அது வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தினுல் அங்கீகரிக்கப்படுவதே நடைமுறை, ஆனுல் வெலிஓயா மட்டும் மூடுமந்திரமாக வைக்கப்பட்டது ஏனே? எதற்காகவோ?

வடக்கு — கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்கத் தேர்தல் நடத்தவேண்டும் என்று விடாப்பிடியாக நிற்கும் அரசு, மக்கள் தீர்ப்பு ஆதரவாக அமையலாம் என அஞ்சி, வெலிஓயாச் சதியைப் பூரணமாக்கி விட்டதா?

தனி ஒருவனது வீட்டுக்குள் அடுத்தவன் அத்துமீறிப் பிரவேசிப்பது 'கிறிமினல்' குற்றம். ஆனுல் தமிழர்களின் பாரம்பரிய மண்ணில் சிங்கள அரசு அத்துமீறிப் பிரவேசிப்பது மட்டுமன்றி, நிரந்தமாக வசித்தவர்களை விரட்டி அடித்துவிட்டு, அவனது நிலத்தையும் பறித்துக்கொள்கிறது என்ருல் அது எவ்வகையான குற்றமாக இருக்கவேண்டும்?

அரசாங்கமே அத்துமீறல் நடத்தி, தமிழர் தாயகக் கோட்பாட்டுக்கு குந்தகம் விளைவித்து, வடக்கையும் கிழக்கையும் செயற்கையாகத் துண்டாடிவிடச் சதிசெய்தால், தமிழர்கள் கைகட்டி, வாய்பொத்தி மௌனிகளாக இருக்க முடியுமா?

அதனுலேயே ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டம் உத்வேகம் அடையவேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டிருப்பதாக முதலில் குறிப்பிட்டோம்.

ஒன்றுபட்ட உரிமைப்போராட்டம், பலமுனைப்பட்டதாக இருக்கவேண்டும். தமிழர்கள்மீது அடக்குமுறை மட்டுமல்ல, அத்துமீறல்களும் நடத்தப்படுகிறது என்பது முழுஉலகத்திற்கும் எடுத்துச் சொல்லப்படுதல் அவசியம். வெலிஓயா விடயத்தில் வெறும்வாய் மெல்லுவோமேயானுல், எமக்கு மீட்சி இருக்க முடியாது. இதுவரை வந்த உயிர், உடைமை, அழிவு ஆபத்துக்களைவிட, இது மிகப்பெரிய ஆபத்து என உணர்ந்து எல்லோரும் கருத்தொருமித்து உழைக்கவேண்டும்.

★ உலக விளையாட்டுத்துறையில் 'கரும்புள்ளி' யான

# லண்டன் உதைபந்தாட்ட களேபரம் உயிரிழந்தோர் எண்ணிக்கை 94!

## பெரும்பாலோர் குழந்தைகள்

லண்டன், ஏப்ரல் 17

லண்டன், லிவர்பூல் என்னும் இடத்தில் நேற்றுமுன்தினம் நடந்த உதைபந்தாட்டப்போட்டி ஒன்றில் ஏற்பட்ட களேபரத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 94 ஆக அதிகரித்தது.

20 பேர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலோர் குழந்தைகள். நசுங்கியும் மூச்சுத்திணறியுமே இவர்கள் இறந்தனர்.

உதைபந்தாட்டக் கிண்ணத்திற்கான அரை - இறுதிப் போட்டி ஒன்று ஆரம்பமான 6 நிமிடங்களில் களேபரம் ஏற்பட்டது.

54 ஆயிரம் பேரைக் கொள்ளக்கூடிய அந்த விளையாட்டரங்கில் முக்கால் வாசி நிரம்பியிருந்தது.

போட்டி ஆரம்பமான பின்னர் அரங்கினுள் நுழைய வெளியே நூற்றுக்கணக்கான ஆதரவாளர், ரசிகர்கள் திரண்டிருந்தனர்

அவர்களை அரங்குக்குள் அனுமதிக்காவிட்டால் குழப்பம் வரலாம் என்று அஞ்சிய பொலீஸார் கதவுகளைத் திறந்து உள்ளே விட்டனர். அதைத் தொடர்ந்தே களேபரம் ஏற்பட்டது.

விளையாட்டு அரங்கினுள் ரசிகர்களிடையே கலவரம் எதுவும் ஏற்படவில்லை.

பிரதமர் திருமதி மார்க்கிரட் தாட்சர் களேபரம் நடந்த காட்சியை டெலிவிஷனில் பார்த்துக்கொண்டிருந்தார்.

இச்சம்பவம் பற்றி உடனடியாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி விளையாட்டுத்துறை அமைச்சருக்கு உத்தரவிட்டார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எலிசபத் மகாராணி அனுதாபம் தெரிவித்தார்.

உலகநாடுகளின் தலைவர்களும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவித்தனர்.

உலக விளையாட்டுச் சரித்திரத்திலேயே லிவர்பூல் களேபரம் ஒரு கறுப்புப் புள்ளியாக அமைந்துவிட்டது என்று அவதானிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்குமுகமாக இங்கிலாந்து உதைபந்தாட்டக் கிண்ணத்திற்கான போட்டியை ரத்துச் செய்யும்படி மக்கள் பிரிட்டிஷ் அரசை வற்புறுத்தியுள்ளனர். [எ]

## ரஷ்யாவிடம் சிரியா மன்னிப்பு

டமஸ்கஸ், ஏப் 16

சோவியத் கப்பல்கள்மீது சிரியாவுக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடத்திய சம்பவம் குறித்து சிரியா அரசு சோவியத் யூனியனிடம் மன்னிப்புக் கோரியது.

அடையாளம் தெரியாத காரணத்தினுல் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக சிரியா அரசு மேலும் தெரிவித்தது. [உ-எ]

## ஈரான்கேட் ஊழல் சம்பவத்தில் அசிபர் புஷ் தீவிர பங்கு

றேகன் நிர்வாகத்தின் கீழ் இடம் பெற்ற ஈரான் கேட் ஊழல்சம்பவத்தில் அப்போது உபஜனுதிபதியாக இருந்த தற்போதைய ஜனுதிபதி ஜோர்ஜ் புஷ் பெரும் பங்கு வகித்தார் என்று அரச தஸ்தாவேஜு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானுக்கு ஆயுதங்களை விற்று வந்த பணத்தை நிக்கரகுவாவில் அரசுப்படைகளுக்கு எதிராகப் போராடும் கொன்ரு கெரில்லாக்களுக்கு அனுப்பிய விஷயத்தில் திரு. புஷ் தீவிரமான பங்கு வகிக்கவில்லை என்று இதுவரை கூறப்பட்டுவந்ததை பொய்யாக்குவதாக இந்த அறிக்கை அமைந்திருக்கிறது. [எ]

## ஜோர்ஜியா மாநில மக்களுக்கு மாஸ்கோ வேண்டுகோள்

மாஸ்கோ ஏப்ரல் 16

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஜோர்ஜியா மாநிலத்துக்கு சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவாநாட்சே விஜயம் செய்தார்.

ஜோர்ஜியா மாநிலத்தைச் சேர்ந்தவர் இவர்.

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஜோர்ஜியா மாநிலத்தில் சடந்த சில தினங்கள் நடந்த ஆர்ப்பாட்டங்களில் 19 பேர் உயிரிழந்தனர்.

அதைத் தொடர்ந்து அங்கு முழுநேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

பிரிந்து செல்ல வேண்டும் என்ற கோரிக்கையைக் கைவிடும்படி வெளியுறவு அமைச்சர் மாநிலத் தலைவர்களைக் கேட்டுக் கொண்டார். (எ)

## அரபாத் எதிர்ப்பு

இஸ்ரவேலினுல் கைப்பற்றப்பட்ட காஸா மற்றும் மேற்குக் கரைப் பிரதேசங்களில் பொதுத்தேர்தல் நடத்தப்படுவதை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் மீண்டும் பலமாக எதிர்த்திருக்கிருர்.

# தெ. ஆபிரிக்காவில் தேர்தல் வருகிற ஜூன் மாதம்

கேப்டவுன், ஏப்ரல் 16

தென் ஆபிரிக்காவில் பொதுத்தேர்தல் வருகிற ஜூன் மாதம் நடைபெறும்.

அதற்கு ஏற்ற விதத்தில் மே மாதம் நாடாளுமன்றத்தைக் கலைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனுதிபதி பி. டபிள்யு. போத்தா தெரிவித்தார்.

ஜனுதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடப்போவதில்லை என்றும் திரு.போத்தா தெரிவித்தார்.

ஜனுதிபதிதேர்தலில்போட்டியிட கட்சித் தலைவர் திரு. எப். டபிள்யு. டி கிளெர்க்கை நியமிக்க ஆளும் கட்சி தீர்மானித்து உள்ளது. [எ]

## காலக்கெடு மேலும் நீடிப்பு

கேப்டவுன், ஏப்ரல் 16

நமீபியாவுக்கு பிரவேசித்த சுவப்போ கெரில்லாக்களை அங்கோலாவுக்கு மீண்டும் திரும்பிச் செல்ல விதிக்கப்பட்ட காலக்கெடுவை மேலும் ஒரு வாரத்திற்கு நீடிக்க ஐ நா.வும் தென்ஆபிரிக்க அரசும் இணக்கம் தெரிவித்து உள்ளன.

சென்ற வெள்ளிக்கிழமை காலாவதியான காலக்கெடு வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. [எ]

## சீனுவில் பூகம்பம்!

பீகிங், ஏப் 16

சீனுவின் தென்மேற்கு மாகாணத்தில் நேற்று கடுமையான பூமியதிர்ச்சி ஏற்பட்டது.

ரிச்டர் அளவையில் 6.7 சக்தி வாய்ந்ததாக இப்பூமியதிர்ச்சி இருந்ததாக நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

உயிரிழப்பு மற்றும் சேதங்கள் பற்றிய விவரங்கள் இன்னும் வெளிவரவில்லை. [எ]

## 22 சிறுவர்கள் பலி!

பம்பாய் ஏப் 16

மகாராஷ்டிர மாநிலத்தில் பர்பாணி என்னுமிடத்தில் சிறுவர்கள் பயணம் செய்த லொறி ஒன்று தீப்பிடித்துக் கொண்டது.

அப்போது 22 சிறுவர்கள் கருகி மாண்டனர்

டாக்டர் அம்பேத்கார் பிறந்த தினத்தை ஒட்டி ஊர்வலமாக சென்று கொண்டிருந்த லொறி ஒன்றே தீப்பற்றி எரிந்தது. (எ)

# நல்லை ஆதீனம் மக்கள் மனதில் நீங்காத இடமாக மிளிர வேண்டும்

## குருபூசை விழாவில் உரை

குருநகர், ஏப்ரல் 17

'இலங்கையில் சைவப் பெருமக்களுக்கெனவுள்ள ஒரேஒரு ஆதீனம் ஞானசம்பந்தர் ஆதீனமாகும், இவ்வாதீனம் சைவமக்கள் மனதில் நீங்காத ஒரு இடமாக மிளிரவேண்டும்.

இவ்வாறு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் குருமஹாசந்நிதானம் 'நல்லைக்குருமணி' ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகளது குருபூஜை கடந்த 12ஆம்திகதி புதன்கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது.

காலை 8 மணிக்கு யாகபூஜையும், விசேஷ ஹோமமும், பகல் 11 மணிக்கு சங்காபிஷேகமும், அதனைத் தொடர்ந்து விசேஷ பூஜை, பஞ்சமுகார்ச்சனை, திருமுறை அர்ச்சனையும் இடம்பெற்றன.

வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், விசேஷ மங்கள இசையைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு ஆதீன சிவாச்சாரியர்களால் மாகேசுரபூஜை நடத்திவைக்கப்பட்டது.

ஆதீன புராண சுபயினரின் சந்தபுராணபடனத்தை அடுத்து சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில்:

'இலங்கையில் சைவப்பெருமக்களுக்கெனவுள்ள ஒரேஒரு ஆதீனம் ஞானசம்பந்தர் ஆதீனம் ஆகும். ஆதீனம் சைவமக்கள் மனதில் நீங்காத ஒரு இடமாக மிளிரவேண்டும்.

ஏனைய பிறமதங்கள் தத்தமது மதங்களை வளர்ப்பதில் உள்ள ஈடுபாடும், ஆர்வமும், உணர்ச்சியும் போலவே சைவமக்களும் தமது சைவமதத்தினை வளர்த்தெடுப்பதற்கு முயலவேண்டும்.

ஆதீனம் வளரவேண்டிய தற்குரிய நடவடிக்கைகளை நாமனைவரும் மேற்கொள்ள வேண்டியதவசியமாகும். நல்லை ஆதீனத்தினை நிறுவி அதன் வளர்ச்சிக்கே அயராது பாடுபட்டுத் தொண்டாற்றிய குருமணி அவர்களை நாம் மறக்கலாகாது.

இப்படி அவர் கூறினுர்.

வித்துவாட்டி திருமதி வசந்தாவைத்தியநாதன் உரையாற்றுகையில் கூறியதாவது:

'உலகில் பிறந்த உயிர்கள் அனைத்தும் உய்யும்வழி குருவருள் பெறுவதொன்ருகும். சிறந்த குருவைப் பெறுவதும் முயற்சியின்வழியேயாகும்.

மூர்த்தி. தலம், தீர்த்தம்
முறையாய்த் தொடங்கி
[னர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே.

என்பார் தாயுமானவர்.

பாம்புக்கடியை நீக்கும் மந்திரவாதி தன்னைக் கருடனுக 'கருடோகம்' பாவனையில் நினைக்க பருவிடம் நீங்கும். அதுபோலக் குருவையே சிவமாக 'சிவோகம்' பாவனையில் நினைக்க ஆன்மாக்களின் திரிமலங்கள் கரைந்து ஜீவன் சிவனுக மாறும்' இவ்வாறு அவர் கூறினுர்.

விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் நன்றியுரையில் கூறியதாவது:

'அறிவு இருவகையாக ஏற்படுவது. கண்ணுல் பார்த்து வாசிப்பதொன்று. காதாலே கேட்டு அறிவைப் பெறுவது இன்னென்று. குருவருள் இவ்விருவகை அறிவினையும் நல்குகின்றது.

குருதரிசனம், குருசொற்கேட்டலென்பன இரண்டிலேயும் செவிவழி கேட்கும் அறிவினை வள்ளுவப் பெருந்தகை 'கற்றிலனுயினும்கேட்க' என்று கூறி அவ்வறிவு ஏழேழ் பிறவிக்கும் பயன்படுவதாகும் என்று விளக்கியுள்ளார்.

தந்தைக்கு உபதேசம்செய்த குமரகுருபரன் தகப்பன் சாமி வதியும் நல்லூரிலே ஆதீனம் அமைத்துப் பணியாற்றிய ஆதீன ஸ்தாபகர் நமது மனங்களில் குடியிருக்கவேண்டும்' இப்படி அவர் கூறினுர்.

சங்கீதபூஷணம் வி. என். நவரெத்தினம் குழுவினரது [illegible]இசைக்கச்சேரி இறுதியாக இடம்பெற்றது. [ச-51]

### தும்பி மா முகனே! மூத்தோய்!!

முதியவள் ஔவை தன்னை
முந்தி யே சேரும் வண்ணம்
துதிக் கரந் தன்னுற் றூக்கி
தூரணங் கயிலை சேர்த்த
துதிப் பவர்க் கருள்பா லிக்குந்
**தும்பிமா முகனே! மூத்தோய்!!**
கதியிலா வெங்க ளுக்குன்
கருணையைப் பொழிகு வாயே.

— கவியரசு வெண்பாமணி
முருகசூரியன்

(தூரணம் = சீக்கிரம், தும்பி = யானை, கதி = அடைக்கலம், ஆதரவு, அதிட்டம், ஐசுவரியம், புகலிடம்)

[இன்று நல்லூர் [illegible]]

# மலேசியா, சிங்கப்பூரில் புகழ்பரப்பும் ஈழக் கலைஞர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

யாழ். பல்கலைக் கழகத்தின் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியைச் சேர்ந்த சங்கீத வித்துவான் திரு. ஏ. கே. கருணுகரன் கடந்த இரண்டு மாதங்களாக மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இசைக் கச்சேரிகளை நடத்தி வருகின்ருர்.

1975ஆம், 1981ஆம் ஆண்டுகளிலும் இந்த நாடுகளின் சங்கீத சபாக்களிலும், கோயில்களிலும் திரு. கருணுகரன் இசைக்கச்சேரிகளை நடத்திப் புகழ் பெற்ருர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## சமய சந்நிதிகளில்

### அண்ணமார் சிவனில் சித்திரை விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

தெல்லிப்பழை கோவிற்புலம் அண்ணமார் சிவன் தேவஸ்தானத்தில் 20 ஆம் திகதி வியாழக்கிழமை சித்திரைச் சித்திரைவிழா நடைபெறும்.

காலையில் விசேட அபிஷேகமும் சுவாமி வெளி வீதி ஊர்வலமும் இடம்பெறும்.

நண்பகல் அன்னதானப் பூசையும் நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும். [ச]

### குருநாதசுவாமி கோயில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

தெல்லிப்பழை கிழக்கு குருநாத சுவாமி கோயில் பாலஸ்தாபனகும்பாபிஷேகம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6-17 தொடக்கம் 7-12 க்கு இடையில் நடைபெறவுள்ளது. (ச)

### புங்குடுதீவு பாணுவிடை சிவன் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

புங்குடுதீவு பாணுவிடை சிவன் தேவஸ்தான மஹோற்சவம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இரதோற்சவம், தீர்த்தோற்சவம் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெறும். (ச -131)

### வண்ணை காமாட்சி அம்பாள் தேர்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 17

வண்ணுர்பண்ணை காமாட்சி அம்பாள் தேர் உற்சவம் 19ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்

## கலைவிழா

மன்னுர், ஏப். 17

மன்னுர் நாகத்தாழ்வு சென் தோமஸ் விளையாட்டுக் கழகம் அண்மையில் கலைவிழாஒன்றை சிறப்பாக நடத்தியது. கலைவிழாவில் நடனம், நாடகம், இசைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவோடு பொது அறிவுப் போட்டியும் நடைபெற்றது.

இதில் மன்னுரைச் சேர்ந்த திரு. ஜாபீர் வெற்றி பெற்ருர். [ச-ரி]




ஸஃதிப்னு உப்பாதா (உலி) அவர்கள் கொஞ்சம் ரொட்டியும், நெய்யும் கொண்டுவந்தார்கள். நபி கள். ஸல்) அவர்கள் கூறினுர்கள் அவைகளைக் கொண்டு நோன்பாளிகளை நோன்பு திறக்க வையுங்கள். பக்தியாளர்களுக்கும் உணவளியுங்கள். நிச்சயமாக நீங்கள் அப்படிச் செய்தால் உங்கள் மீது மலக்குகள் (ஸலவாத்) துஆப் பிரார்த்தனை செய்வார்கள்.

ஸஹர் முடிவு- 4 28
நோன்பு திறக்கும் நேரம் - 6 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னை மரக்குடி எண்ணை

கை கால் சுளுக்கு, எலும்பு முறிவு, மூட்டு நழுவுதல், வாயு முச்சுப் பிடிப்பு, அடிபட்ட வீக்கம் ரத்தக் கட்டு, முதுகுவலி முதலியன வற்றுக்குச் சிறந்தது.

1 சிசா போத்தல் விலை:- ரூபா 16/-

கிடைக்கும் இடம்:-
க செ கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்



# உதயன்

17 - 04 - 1989 திங்கட்கிழமை



## KAILAS CATARRA OIL
### கைலாஸ் பீனிஸ் தைலம்

இது கண், காது. மூக்கு, தொண்டை முதலியவற்றில் அரிப்பு, ஓயாத தும்மல், கண்ணீர் வடிதல், நாசியிலிருந்து இரத்தம் வருதல் போன்ற (21) வகையான பீனிஸ வகைகளுக்கு நிவாரணம் தரும்.

4 அ, போத்தல் விலை ரூபா 20/-
கிடைக்கும் இடம்:-
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்
76, பெரியகடை யாழ்ப்பாணம்; போன்: 23135



## ★ உடன் தேவை ★

### 1. அலுவலகப் பீயோன் (Peon)

உதயன் அலுவலகத்தில் பணிபுரிவதற்கு மேற் கண்ட பதவிக்கு இருவர் தேவை.

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

அனுபவம் இல்லாதவர்கள் சுறுசுறுப்பு உள்ள வர்களாகவும், எந்தப் பணியையும் செய்வதற்கு விருப்பம் உள்ளவர்களாகவும் இருத்தல் அவசியம்.

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசிப்பவர் கள் விரும்பப்படுவர்.

நற்சான்றுப் பத்திரங்கள் இரண்டுடனும், கல்விச் சான்றிதழ்களுடனும் நேரில் வரவும்.

### 2. வான் சாரதி

பலவருட அனுபவமும், நற்குணங்களும் உடைய வான் சாரதி ஒருவர் தேவை.

திடகாத்திரமான உடம்பும் ஆரோக்கியமும், யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசிப்பவராக வும் இருப்பவருக்கு முன்னுரிமை கொடுக்கப் படும்.

முன்னர் பணிபுரிந்த இருவரிடம் பெற்ற நற் சான்றிதழ்கள், சாரதி லைசென்ஸ் என்பவற்று டன் நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி & நிர்வாகம்),
நியு உதயன் பப்பிளிக்கேஷன்ஸ்
பிறைவேட் லிமிட்டெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



## மானிப்பாய் இந்துக்கல்லூரி

முறைசாராக் கல்விப்பிரிவு படவரைஞர்

தட்டச்சுப் பரீட்சைகள் - 1989

20-04 89 (வியாழன்)
21-04-89 (வெள்ளி)

* பரீட்சார்த்திகள் உடனடியாக என்னை சந்தித்து மேலதிக விபரங்களைப் பெறத் தவற வேண்டாம்.

சி. வே. மஹேஸவேலு,
அதிபர்.

[சி-2210]


## OBITUARY
### Florence Nallammah Raja

Florence Nallammah Raja nee Thomas) wife of Late N Suppiah aja (N. S. Rajah), mother of Balambikai, Sathananthan, Leelawathy, Ramanathan imal (Formerly Bank of Ceylon-Mc Leod Hospital, Inuvil). Savithiri (Uduvil Girls College) and Susantha Director, Jap Autos Ltd. and Proprietor, Global Traders) and mother-in law of Sivasubramaniam, Manonmany Wilmot, Thavamany, Renee Cement Corporation, K K. S. and Aruli sister of Lilly Alexander Jessie Britto, Francis A. Thomas and George R. Thomas expired

Funeral service will take place on Monday the 17th of April at 3 00 p. m

Nimal Raja

No. 7, Love Lane,
Uduvil.

(10599)

# வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு
# விஸ்தரிப்பு வேலைகளுக்கு ரூ.20லட்சம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு விஸ்தரிப்பு வேலைகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினருக்காக ஒதுக்கப்படும் நிதியில் இருந்து 20 லட்சம் ரூபா செலவிடப்படும்.

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் மேற்கண்ட வாறு உறுதி அளித்தார்

அரைகுறையாக உள்ள ஐந்துமாடிக் கட்டடத்தை கூடிய விரைவில் பூர்த்திசெய்து தருவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் நிலவும் டாக்டர்கள் பற்றுக்குறை பற்றிமுதலமைச் சரிடம் சுட்டிக்காட்டப்பட்ட போது ஓய்வு பெற்ற திறமை மிக்க டாக்டர்களை சம்பள அடிப்படையில் பகுதி நேர வேலைக்கு அமர்த்த நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

(இ)

## 'பல்கலைக்கழக மாணவரை விடுவிக்குக'

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக (முதலாம் வருட) மாணவன் செ. சிறிஸ்கந்தராசா வ விடுதலை செய்யும்படி யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிக்கை மூலம்வேண்டுகோள் விடுத்துள்ளது.

பரீட்சைகளின் பின்னர் யாழ். பல்கலைக்கழகம் இன்று 17 ஆம் திகதி ஆரம்பமாக ஏற்பாடாகி உள்ளது குறிப்பிடத்தக்கது. [அ]

## ஆணையாளர் இன்று பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ் மாநகர சபையின் புதிய ஆணையாளராக திரு. பொ. நவரட்ணராசா இன்று பதவியேற்கிறார்.

இதுவரை காலமும் இவர் சாவகச்சேரி நகர சபையின் செயலாளராக கடமையாற்றி வந்தார் (உ-9)

## அ' புரத்தில் பிரேமா

கொழும்பு, ஏப்ரல் 17

ஜனாதிபதி பிரேமதாஸ நேற்றுஅனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தார்.

திருகோணமலை சார்க்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்வர்களையும் வெலிஓயா நிலக்கண்ணித் தாக்குதலில் காயமடைந்த படையினரையும் ஜனாதிபதி ஆஸ்பத்திரியில் பார்த்தார். [உ-எ]

## லண்டன் உயிரிழப்பு: 108

லண்டன், ஏப்ரல் 17

நேற்று முன்தினம் லண்டனில் இடம்பெற்ற உதைபந் தாட்டக் களேபரத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 108 ஆக அதிகரித்துள்ளது. [உ-எ]

## பேச்சுக்...,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாகவும் கூறப்பட்டது.

''பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்வது குறித்து கலந்தாலோசிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரை நியமித்து அனுப்புங்கள். எங்கு பேச்சு நடத்தப்பட வேண்டும் என்பதையும் அறிவியுங்கள்''

—இவ்வாறு அந்தப் பதில் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (இ-உ-எ)

## ரயில் கொள்ளையர் மாட்டினர்

கொழும்பு, ஏப்ரல் 17

பொல்காவலைக்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையில் ரயில்களில் கொலை மற்றும் கொள்ளைகளை நடத்தியதாக கூறப்படும் மூன்று பேரைக்கொண்ட கோஷ்டி ஒன்றை பொலீஸார் அண்மையில் கைது செய்தனர்.

கொள்ளைச் சம்பவங்களில் உடைமைகளைப் பறிகொடுத்தவர்கள், கொலைக்குற்றச்சம் பவங்களைக் கண்டவர்கள் பொலீஸாருடன் தொடர்பு கொண்டு சந்தேகநபர்களை அடையாளம் காட்ட உதவும்படி மாரவில பொலீஸார் கேட்டுள்ளனர்.

13கொலைகளையும்பலகொள்ளைகளையும் செய்ததாக இக் கோஷ்டி ஒப்புக்கொண்டுள்ளதாம். [உ-எ]

## கசிப்பு தயாரித்தோருக்கு காரைநகரில் தண்டனை

காரைநகர், ஏப்ரல் 17

காரைநகர் மல்லிகை, சிவகாமி அம்மன் கோவிலடி, விக்காவில் போன்ற பகுதிகளில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு பொது மக்கள் குழு ஒன்று கடும் தண்டனை வழங்கியது.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சிலரின் வீட்டுக்கு கடந்த புதன், வியாழக்கிழமைகளில் இரவு நேரத்தில் அடுத்தடுத்துப் புகுந்த பொது மக்கள் குழு ஒன்று அங்கு கசிப்பு உற்பத்திக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் உபகரணங்களை அடித்துச் சேதப்படுத்தியது.

அங்கு கசிப்பு அருந்திக் கொண்டிருந்தவர்களுக்கும் கசிப்பால் ''அபிஷேகமும்'' செய்யப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது இருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது போன்ற சம்பவம் ஏற்கனவே வலந்தலையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

(உ-73)

## குழாய் நீர்: 'இன்று திருத்த வேலை

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ். நகருக்கான குழாய் நீர் விநியோகத்தை வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான திருத்த வேலைகள் இன்று நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த இரண்டு நாட்களாக பாதிப்புற்று இருந்த குழாய் நீர் விநியோகம், திருத்த வேலைகள் நடக்கும் பட்சத்தில் இன்று மாலையளவில் சீராகலாம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

தண்ணீர்க்குழாய் பாதிக்கப்பட்ட இடத்திற்குச் சென்று திருத்த வேலைகள் செய்வதற்கு அமைதிப் படையினர் அனுமதி வழங்கினால் மட்டுமே ஊழியர்கள் திருத்த வேலையைச் செய்ய முடியும் எனவும் அதே வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. (அ-9)

## புதிய மாணவர் இன்று வரவு

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின 1988-89 கல்வி ஆண்டுக்கான புதிய தவணை இன்று 17ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

புதிய மாணவர்கள் இன்று முதல் முறையாக விரிவுரைகளுக்குச் சமுகமளிக்க ஏற்பாடாகி உள்ளது.

இலங்கையிலேயே யாழ். பல்கலைக்கழகத்தில் மட்டும்தான் இவ்வருட புதிய மாணவர் அனுமதி நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஆசிரியர் கைது

கொழும்பு, ஏப்ரல் 17

அளுத்கம என்னும் இடத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர் ஒருவரை பொலீஸார் கடந்த வாரம் கைது செய்தனர்.

கண்டி மாவட்டத்தில்தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் அவர் கைதானார் என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மத்துகம பொலீஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பல அரசியல் ரீதியான கொலைகள் தொடர்பாக இவர் தற்போது விசாரணைக்குஉட்படுத்தப்பட்டிருக்கிறார். [உ-எ]

## 3 கோட்டக்கல்வி . . .

(1- ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணக் கல்வி வட்டாரங்கள் இணைக்கப்பட்டு யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும். இக் கோட்டக் கல்வி அலுவலகத்தின் அதிகாரியாக திரு. ரீ. தியாகராசா கடமை புரியவுள்ளார்.

மேற்படி மூன்று கோட்டங்களுக்குப் பொறுப்பாக ஒரு பொறியியலாளரும், ஒரு கணக்காளரும் கடமை புரிவர்.

இதற்காக யாழ்ப்பாணக் கல்வி மாவட்டத்திற்கு மேலும் ஒரு பொறியியலாளரும், கணக்காளரும் நியமிக்கப்படவுள்ளனர்.

(உ-219)

## காரைநகரில் தாக்குதல்

காரைநகர், ஏப்ரல் 17

காரைநகர் ஆலடியில் நேற்று முன்தினம் மாலையில் ரோந்து சென்ற படையினர் மீது கண்ணி வெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதியில் சுமார் அரை மணி நேரம் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. தேடுதலும் இடம் பெற்றது. [உ-73]

## கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை!

கொழும்பு, ஏப். 17

பண்டாரவளை பொலீஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஜே. பி. பியதாஸ என்பவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இனந் தெரியாத கோஷ்டி ஒன்றினால் சுட்டுக் கொல்லப் பட்டார். [உ-எ]

## மரண அறிவித்தல்கள்

### செல்வி கமலாவதி பசுபதிப்பிள்ளை
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி)

சுண்டிக்குளியைச் சேர்ந்த செல்வி கமலாவதி பசுபதிப்பிள்ளை 16 - 04 - 89 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற பசுபதிப்பிள்ளை ராசமணி ஆகியோரின் அன்பு மகளும், சுந்தரமூர்த்தி [U.K], திருஞானசம்பந்தன், பாமாவதி [U.K], கலாவதி [U.S.A], மஞ்சுளாவதி[யாழ். பல்கலைக்கழகம், வணிகத் துறை], ஜனகன், சிவராஜ் [பரியோவான் கல்லூரி] ஆகியோரின் அன்புச்சகோதரியும், Dr. தவமோகன் காந்தி [U.K], கலாநிதி யோகநாதன் [U.S.A], றஞ்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று [17 - 04 - 1989] திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தாய், சகோதரர்கள்.

14/1, பீளைச்சர் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(3375)

### காசிப்பிள்ளை சதாசிவம்

நுணுவில் மேற்கு கொல்லன் கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தாவும், இளைப்பாறிய [C.W.E] உத்தியோகத்தரும், முன்னாள் சாவகச்சேரி பட்டினசபை உறுப்பினருமான நுணுவில் மேற்கைச் சேர்ந்த காசிப்பிள்ளை சதாசிவம் காலமானார்.

இவர் காலம் சென்ற சட்டத்தரணி காசிப்பிள்ளை பராசத்தி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், அன்னப்பிள்ளையின் அன்புக்கணவரும், பூவேந்திரன் (Malship Ceylon Ltd.) அவர்களின் தந்தையும், பத்மினி (ஆசிரியை மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஸ்ட வித்தியாலயம்) மாமனாரும், கஜேண்டிராவின் பேரனும், உருத்திரா (இளைப்பாறிய பிரதம லிகிதர் சமூகசேவை இலாகா, யாழ்ப்பாணம்), யோகநாதன் (இளைப்பாறிய உத்தியோகத்தர், யாழ்ப்பாண மாநகரசபை), வள்ளிநாயகி, திருத்தேவி அவர்களின் சகோதரனும், ஜெகேஸ்வரி, ஜெகன்மாதா, ஆ. கந்தையா [இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்], கே. மகேஸ்பரன் [ஆசிரியர். சாவகச்சேரி இந்துக் கல்லூரி], ஆ. பொன்னம்மா (கனடா), செல்லம்மா, இலச்சுமிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை [18-04-89] பிற்பகல் 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
ச. பூவேந்திரன்

நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி.

[3377]




## சொலிட் பம்ப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 17 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.